# தமிழரசு

1-1-1997

ரூ.3







# இந்த இதழில் ...


★ பூவைப் போலப் போற்றுவோம்.........2

- முதல்வர் உரை

★ தொழில் வளம் ஓங்கிவளரும் தமிழ்நாடு!.........9

- முதல்வர் உரை

★ புற்றுநோய்.........13

- மருத்துவக் கட்டுரை

★ குழந்தைத் தொழிலாளி முறையை முடிவுக்குக் கொண்டுவருவோம்.........20

★ 1997 ஆம் ஆண்டு நாட்காட்டி.........25

★ எங்கள் ஊர்ப் பிரச்சினை.........31

★ மழைக்கோலம்.........37

★ அறிவியல் துளிகள்.........42

★ உங்களுக்குத் தெரியுமா? -மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை.....45

★ ஆசிரியர் மடல்.........52



## தமிழரசு

திருவள்ளுவராண்டு: 2027

மார்கழித் திங்கள் : 18

மலர்: 27 இதழ்: 13

1.1.1997

விலை: ரூ. 3



முதல் பரிசு பெற்ற கவிதை:

# இன்றுபோல் என்றும் இரும்

-கவிஞர் கே. குப்பமுத்து

வாய்வெடித்த மண்ணில் உன்
வரவைக் கண்ட போது ...
என்னுள் ஒரு சந்தேகம்
எது உண்மை? கடவுளா- மழையா?

வேண்டும்போது வருவதும் இல்லை
வேண்டாமென்றால் போவதும் இல்லை!
உருவமில்லா நீ இல்லையேல் இந்த
உருளும் உருண்டையில் ஒன்றுமே இல்லை!

நீபோடும் பிச்சையில் நிதம்வாழும் மனிதன்
பணத்துக்கும் புகழுக்கும் அடித்துக்கொள்வதேன்?
நிறமில்லா உன்னிடம் வரம்ஒன்று கேட்பேன்.
உன் வயதென்ன? எனக்கு மட்டும் சொல்!

புயலாய் வரும்போது விரும்பவும் முடியவில்லை
வெயிலாய்க் காயும்போது வெறுக்கவும் வழியில்லை;
மழையே! நீஎன்ன கடவுளா? இல்லை!
எதுவாயினும்- "இன்று போல் என்றும் இரும்"!

# 'பூவைப் போலப் போற்றுவோம்!'

## முதல்வர் கலைஞர் கருத்துரை

**சி**ந்தனைச் சிற்பி மா. சிங்கார வேலர் அவர்களின் பெயரில் சென்னை ராஜாஜி சாலையில் அமைந்துள்ள சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடத் திறப்பு விழா **11.12.1996** அன்று நடைபெற்றது

வருவாய்த்துறையின் செயலாளர் திரு பி.எஸ். பாண்டியன்,இ.ஆ.ப., வரவேற்புரையாற்றினார். பொதுப் பணித்துறையின் தலைமைப் பொறியாளர் திரு என். தங்க வேலு கட்டட அறிக்கை படித்தார்.

விழாவிற்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் தலைமையேற்று உரையாற்றினர்.

அடுத்து, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சிங்கார வேலர் மாளிகையைத் திறந்து வைத்தார்.

விழாவில் சட்டமன்ற உறுப்பினர் திரு இரா. மதிவாணன், வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு மு.க. ஸ்டாலின், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி சற்குணபாண்டியன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு துரைமுருகன், மாண்புமிகு மத்திய பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் திரு என்.வி.என். சோமு, மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் ஆகியோர் உரையாற்றினர்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் பொன்னாடை அணிவித்துக் கௌரவித்தார். சட்டமன்ற உறுப்பினர் திரு இரா. மதிவாணன் அவர்கள் முதல்வருக்கு நினைவுப் பரிசு வழங்கினார். நிறைவாக மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் விழாப் பேருரையாற்றி, நலிந்தோர்க்கு அரசு நலப்பணித் திட்டத்தின்கீழ் உதவிகள் வழங்கினார்.

சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி சாந்தினி கபூர், இ.ஆ.ப., நன்றி கூறினார்.

இவ்விழாவில் மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்களும், மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு. பரிதி இளம்வழுதி மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

### மாண்புமிகு முதல்வர் உரை

விழாவில், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், ஆற்றிய உரையின் சுருக்கம் பின் வருமாறு:

"இன்று திறந்துவைக்கப்படும்





மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகமான இந்த சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மாளிகையில், சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சார்புக் கருவூலம், முத்திரைத்தாள் துணைக் கண் காணிப்பாளர் அலுவலகம், முன்னாள் படைவீரர் துணை இயக்குநர் அலுவலகம், சம்பளப் பட்டியல் வடக்குப் பகுதி அலுவலகம், மாவட்டக் கருவூலம், தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் அலுவலகம், தமிழ் நாடு விற்பனை வரி சிறப்பு மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத்தினுடைய அலுவலகம் ஆகிய இத்தனை அலுவலகங்களும் இந்தக் கட்ட டத்திலேயே இயங்கவிருக்கின்றன.

சென்னை மாவட்டம் என்ற ஒன்று உருவானபோது, மாவட்டத் தினுடைய மக்கள்தொகை அப் பொழுது **10** இலட்சம் பேர்தான். இன்றைக்கு **55** இலட்சம் பேர் என்பதை மறந்துவிடக்கூடாது. இந்த **55** இலட்சம் பேருக்குப் பணியாற்ற வேண்டிய கடமை மாநகராட்சிக்குப் பொறுப் பேற்றிருக்கிற மேயருக்கும், பல் வேறு பகுதிகளைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கும் இருப்பதைப் போல, இந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலே இருக்கின்ற அலுவலாளர்களுக்கும், ஆட்சி யருக்கும் இருக்கும் என்பதை மறந்துவிடாமல் பணியாற்ற வேண்டும்.

## 'யோக்கியர்' பெயர் தாங்கிய கட்டடம்

சிங்காரவேலர் மறைந்த பொழுது மூதறிஞர் ராஜாஜி "ஒரு யோக்கியனை இழந்துவிட்டோம்" என்று சொன்னதாக இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஆகவே இந்தக் கட்டடத்திற்கு நாம் வைத்திருக்கின்ற பெயர் சிங்கார வேலருடைய பெயர். ஒரு யோக் கியருடைய பெயர் வைத்திருக் கிறோம். இந்தக் கட்டடத்திலே இருந்து ஆற்றப்படுகின்ற பணி களெல்லாம் யோக்கியமாக நடைபெறவேண்டும் என்கிற அந்த நோக்கத்தோடுதான் இந்தப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

சிங்காரவேலர் மீது எனக் குள்ள பற்று – பாசத்தின் காரணமாக, இராமநாதபுரத்திலே உள்ள மாவட்ட ஆட்சியர் அலு வலக மாளிகைக்கும் "சிங்கார வேலர் மாளிகை" என்றேதான் பெயர் சூட்டியிருக்கிறேன்.

இன்றைக்கும் இந்த மாளி கைக்கு சிங்கார வேலர் மாளிகை என்று பெயர் சூட்டியிருக்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால், மீனவர்களுக்காகக் குடியிருப்புகள் கட்டுவது என்று இந்த ஆண்டு திட்டமிட்டு அந்தக் குடியிருப்புகள் கட்டத் தொடங்கப்பட்டுள்ளது. அந்தக் குடியிருப்புகளுக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று மீனவர் நலத்துறையின் சார்பாக என்னைக் கேட்டபொழுது, "சிங்காரவேலர் மீனவர் குடியிருப்பு" என்று பெயர் வைக்கவேண்டும் என்று நான் கூறினேன். அவ்வாறே பெயர் வைக்கப்பட்டு – அந்தக் குடியிருப்புத் துறையும் இயங்கிக் கொண்டிருப்பதை உங்களுக்கு நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சிங்காரவேலர் இந்தியா விலேயே முதன்முதலாக மே தினத்தைக் கொண்டாடிய தொழி லாளர்களின் தோழர். காங்கிரஸ் இயக்கத்திலே இருந்தார். பின்னர் சுயமரியாதை இயக்கத்திலே தன்னை இணைத்துக் கொண்டார். தந்தை பெரியாரோடு இணைந்து சமத்துவ சமதர்மக் கொள்கைக் காகச் சமர் புரிந்தார். சலியாது பாடுபட்டார்.

## சிங்காரவேலருக்குச் சிலை

அத்தகைய மேதைக்குத் தஞ்சை மாவட்டத்திலே ஒரு சிலை அமைக்கப்பட்டிருக்கிறது. அதைப் போல இந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு முன்புறத்திலும் சிங்கார வேலருக்கு ஒரு சிலை அமைக்கப்படும்.

அரசு அதிகாரிகள் இந்த அலுவலகத்திலே இருந்து சிறந்த முறையிலே பணியாற்ற வேண்டும் என்று நான் தொடக்கத்திலே கேட்டுக்கொண்டேன். இன்றைக்கு அரசு அதிகாரிகளிடத்திலே ஒரு வகையான சந்தேகம் கலந்த – அல்லது வேண்டுமென்றே சந் தேகம் கொள்ளவேண்டும் என்று தூண்டி விடப்படுகின்ற ஒரு அச்ச உணர்வு பரவி இருப்பதை நான் உணர்கின்றேன். ஏனென்றால் கடந்த காலத்திலே நடைபெற்ற தவறுகளுக்குத் துணை போன அதிகாரிகள் இன்றைக்குப் பிடிக்கப்படுகிறார்கள், நடவடிக் கைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். இதை எல்லாம் பார்க்கும்போது தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கும் அதிகாரிகள் நமக்கும் இப்படி ஏற்படுமோ என்று அஞ்சத் தேவையில்லை. யார் தவறு செய்தார்களோ, அவர்களுக்குத்தான், அந்த நிலையேதவிர, தவறு செய்யாமல் நல்லமுறையிலே மக்களுக்காகப் பாடுபடுகின்ற எந்த அதிகாரி யையும் நாங்கள் பூவைப்போல வைத்துப் போற்றுவோம்.

எனவே, அதிகாரிகள் வீணாக சஞ்சலத்திற்கு ஆளாக வேண்டாம். சபலத்திற்கு ஆளான அதிகாரிகள் தான் இன்றைக்கு சஞ்சலத்திற்கு ஆளாக வேண்டுமேயல்லாமல் வேறு எந்த அதிகாரிகளும் சஞ் சலத்திற்கு ஆளாகத் தேவை யில்லை."

– இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமது உரை யில் குறிப்பிட்டார்.

-பி.எல்.ஆர்.

## கன்னியாகுமரியில் - திருவள்ளுவர் சிலை அமைக்கும் பணி விரைவுபடுத்துதல்

கன்னியாகுமரியில் 133 அடி உயர திருவள்ளுவர் சிலை அமைக்கும் பணி 1990இல் தொடங்கப்பட்டது. இப்பணியை நிறைவேற்றி முடிக்கும் பொறுப்பு தமிழ்நாடு அரசின் கட்டுமானக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

சிலை வடிக்கும் சிற்பி திரு.வை.கணபதி ஸ்தபதிக்கு அனுமதிக்கப்பட்ட தொகையை உரிய நேரத்தில் வழங்காமையால், சிலை வடிக்கும் பணி 01.03.95 முதல் அறவே நடைபெறவில்லை.

இப்பணியை விரைவுபடுத்துவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உடனடியாக ரூ.15 இலட்சத்தை அனுமதித்து ஆணையிட்டுள்ளார்.

## தூத்துக்குடி சிப்காட் தொழில் மையம்

தொழில் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்ட இந்த அரசு தமிழகத்தில் புதிதாகப் பல தொழில் பேட்டைகளை ஏற்படுத்தியும் மாவட்டத்தின் பல பகுதிகளில் செயல்பட்டுவரும் தொழில் மையங்களை விரிவாக்கியும் வருகின்றது. அந்த அடிப்படையில், தூத்துக்குடி அருகாமையில் அமைந்துள்ள சிப்காட் தொழில் மையத்தை விரிவாக்கம் செய்திட ரூ.35 கோடி செலவில், சுமார் 650 ஹெக்டேர் நிலங்களைக் கையகப்படுத்த தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

# செய்திச்சரம்

## காவல்துறையை நவீனப்படுத்த ரூ.1.97 கோடி ஒதுக்கீடு

தமிழகக் காவல்துறையை நவீனப் படுத்தும் வகையில் ரூ.1.97 கோடி செலவில், வாகனங்கள், இலகுரக ஆயுதங்கள், போக்குவரத்து மற்றும் கூட்டங்களைக் கட்டுப் படுத்தத் தேவையான கருவிகள் மற்றும் கணிப்பொறிகள் வாங்கிட அனுமதித்து தமிழக முதல-மைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

## அறிவியல் மற்றும் பொறியியல் நூல்களை தமிழில் வெளியிட ஆணை

தமிழகத்திலுள்ள பல்கலைக் கழகங்களில் பயிலும் மாண்வ, மாணவியர் தங்கள் படிப்பினைத் தாய்மொழித் தமிழிலேயே பயில வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு பட்டப்படிப்புகளுக்கும் மற்றும் பட்டமேற்படிப்பிற்கும் பயனாகும் வகையில் அறிவியல் மற்றும் பொறியியல் துறைகளின் நூல்களைத் தமிழில் புத்தகமாய் வெளியிட ரூ.64 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

## 'கலாரத்னா' விருது !

கர்நாடக இசை மேதை டாக்டர் எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களுக்கு ஆர்.ஆர். சபையின் 4வது ஆண்டு விழாவில் தங்கப்பதக்கம், பாராட்டுப்பத்திரம், ரூ.25,000 ரொக்கம் ஆகியவை கொண்ட 'கலாரத்னா' விருது வழங்கப்பட்டது. அந்தத் தொகையை அடையாறில் உள்ள வி.எச்.எஸ். மருத்துவமனைக்கு நன்கொடையாக அளித்துவிட்டார் அம்மையார்.

## முதல்வரின் வெள்ள நிவாரண நிதி

**த**மிழகப் புயல் வெள்ள நிதிக்காக மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், தனது ஒரு மாத ஊதியத்தை (ரூ.5,000) வழங்கினார். மேலும் மாண்புமிகு அமைச்சர்கள் நாஞ்சில் திரு. சி. மனோகரன், திரு. தமிழ்க் குடிமகன், திரு. முல்லைவேந்தன் ஆகியோரும் மற்ற அமைச்சர் பெருமக்களும் தங்கள் ஒரு மாத ஊதியமான ஐந்தாயிரம் ரூபாயைத் தமிழக வெள்ள நிவாரண நிதிக்காக மாண்புமிகு முதலமைச்சரிடம் வழங்கினார்கள்.

மேலும் சட்டப் பேரவை உறுப்பினர்கள் சிலரும் தங்களுடைய ஒரு மாத ஊதியத்தை வெள்ள நிவாரண நிதிக்காக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் வழங்கினார்கள்.

## ராகிங் - தடை

'தமிழ்நாட்டில் உள்ள கல்வி நிலையங்களில் 'ராகிங்' செய்வோருக்கு இரண்டாண்டு கடுங்காவல் தண்டனையும், ரூ.10,000 வரை அபராதமும் விதிக்கப்படும். இதற்கு ஆளான மாணாக்கர்கள் கல்விக் கூடத்திலிருந்து நீக்கப்படுவர். வேறு எந்தக் கல்வி நிலையத்திலும் சேர்க்கப்படவும் மாட்டார்கள் என்கிற ஆணையை, மேதகு தமிழக ஆளுநர் திரு கிருஷ்ணகாந்த் அவர்கள் பிறப்பித்திருக்கிறார்.

## தமிழ்த் தட்டச்சுப் பொறிகள்!

**த**மிழ் ஆட்சிமொழித் திட்டத்தை அரசு அலுவலகங்களில் செம்மையாகவும், முழுமையாகவும் செயற்படுத்த தலைமைச் செயலகத்திலுள்ள ஒவ்வொரு துறைகளின் பயன்பாட்டிற்காக ரூபாய் 50 இலட்சம் செலவில் 500 தமிழ்த் தட்டச்சுப் பொறிகள் வாங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார். அதற்கேற்ப 32 மின்னணு தமிழ்த் தட்டச்சுப் பொறிகள் உட்பட 500 தமிழ்த் தட்டச்சுப் பொறிகள் வாங்கப்பட்டுள்ளன.

## முதல்வர் கலைஞர் தலைமையில் விடுதலை நாள் பொன்விழாக் குழு

**மு**தல்வர் கலைஞர் தலைமையில் விடுதலை நாள் பொன் விழாக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் விவரம்:

தலைவர்: முதல்வர் கலைஞர், உறுப்பினர்கள்: செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. வ.முல்லைவேந்தன், திரு. சி. சுப்ரமணியம், திரு. ஜி.கே. மூப்பனார், திரு. டி.செங்கல்வராயன், திரு. கிருஷ்ணசாமிபாரதி, திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி, திரு. கே.டி.கே. தங்கமணி, திரு. சோ. பாலகிருஷ்ணன் (எதிர்க் கட்சித் தலைவர்), திரு. மணவை முஸ்தபா, திரு. இளைய பெருமாள், ஆசிரியர் திரு.சாவி. திரு.கே.பாலச்சந்தர் (இயக்குநர்), டாக்டர் எம். அனந்தகிருஷ்ணன், திருமதி சரோஜினிவரதப்பன், திரு. செ.குப்புசாமி, திரு. ஏ.வி.எம். சரவணன் மற்றும் தலைமைச் செயலாளர், செய்தி மற்றும் சுற்றுலாத்துறை செயலர்.

## கால்நடை இனவிருத்திக்கு ரூ.15 இலட்சம் செலவு

தமிழகத்தில், தொலைதூர கிராமங்களிலும், மலைப்பிரதேசங்களிலும் உள்ள கால்நடைகளுக்கு இனவிருத்தி வசதி கிடைக்கும் வகையில் தரமான 300 கலப்பின பொலிகாளைகளை வாங்கி வழங்குவற்கு நடப்பு ஆண்டில் ரூ.15 இலட்சம் செலவிட தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்.

## தமிழகத்தில் உள்ள 55 அரசு பல்தொழிற் பயிற்சிப் பயிலகங்கள் மேம்பாட்டிற்காக ரூ. 91.60 இலட்சம்

தமிழகத்திலுள்ள 55 அரசு பல்தொழிற் பயிற்சி பயிலகங்களை மேம்படுத்தி, படிக்கும் மாணவ மாணவியர் பலன் பெறும் வகையில் செயல்முறை பயிற்சிக் கருவிகள் மற்றும் புதிய புத்தகங்களை வாங்கிட ரூ.70 இலட்சமும், அத்தொழிற்பயிற்சிப் பயிலகங்களில் பயிற்சி அளிக்கும் சாதனங்களுக்குத் தேவையான பொருட்கள் வாங்கிட ரூ.21.60 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.91.60 இலட்சம் அனுமதித்து தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

## ம. சிங்காரவேலர் நினைவு வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் மீனவர்களுக்கு 4000 இலவச வீடுகள்

**1996-97**-ஆம் ஆண்டில் மீனவர்களுக்கு 4000 இல்வச வீடுகள் ம. சிங்காரவேலர் நினைவு வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் தமிழக அரசு வழங்கும் என்று முதல்வர் கலைஞர் அறிவித்துள்ளார். ஒவ்வொரு வீட்டின் மதிப்பும் ரூ.32000/- ஆகும். தமிழகத்தில் 13 மாவட்டக் கடலோரப் பகுதிகள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. அவ்வீடுகள் கட்டுவதற்கு ரூ.12.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்து முதல்வர் கலைஞர் ஆணையிட்டுள்ளார். மேலும் அவ்வீடுகள் அனைத்தும் நடப்பு நிதியாண்டில் கட்டிமுடிக்கப்படும்.

## தமிழகத்தில் இரண்டு சிறப்புத் திட்டங்களுக்கு மத்திய அரசு நிதியுதவி அளித்துள்ளது.

பெரியார் மாவட்டத்திலுள்ள சாலியமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் செயல்பட இருக்கும் திட்டத்திற்கு ரூ. 14 கோடியும், திருநெல்வேலி மாவட்டம் குருவிக்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் அமல்படுத்தப்படவிருக்கும் திட்டத்திற்கு ரூ.10.40 இலட்சத்தையும் மத்திய அரசு நிதி ஒதுக்கியுள்ளது. இத்திட்டங்கள் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் செய்து முடிக்கப்படும்.

## காவிரி நடுவர் மன்றத்துக்குப் புதிய நீதிபதி நியமனம்

காவிரி நடுவர் மன்றத் தலைவராக இருந்த சித்ததோஷ் முகர்ஜி ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, அப்பதவிக்கு யாருமே நியமிக்கப்படாத நிலை; தற்போது, மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் கோரிக்கையை ஏற்று மத்திய அரசு காவிரி நடுவர் மன்றத்துக்குப் புதிய தலைவராக நீதிபதி திரு. என். பி. சிங் அவர்களை நியமித்துள்ளது.

## FINANCE (PENSION) DEPARTMENT

### G.O. No. 488, Dated 12th August 1996

### (Thadhu, Aadi 28, Thiruvalluvar Aandu 2027)

RETIREMENT BENEFITS - Encashment of leave at the time of retirement - Encashment of leave on private affairs and payment of full leave salary for the period of earned leave exceeding 180 days - Orders - Issued.

**READ** - the following papers:-

1. G.O. Ms. No.999, Personnel and Administrative Reforms Department, dated 31.10.1987.

2. G.O. Ms. No. 545, Personnel and Administrative Reforms Department, dated 30.9.1989.

**ORDER:**

At present the entire earned leave subject to a maximum of 240 days at the credit of the employees shall be entitled for encashment at the time of retirement and the leave salary for the period of earned leave upto 180 days comprises of Dearness Allowance, House Rent Allowance, City Compensatory Allowance, etc., as admissible under the rules and for the period of earned leave exceeding 180 days, the leave salary comprises of Pay and Dearness Allowance only. Further, at present, the half pay leave on private affairs at the credit of the retiring employees shall lapse.

2. The Government have decided to accept the long pending demand of various associations of employees to surrender half pay leave on private affairs at the time of retirement and also to grant full leave salary for encashment of the entire earned leave at credit of retiring employees. Accordingly, Government pass the following orders:-

(a) At the time of retirement, 50% of the leave on private affairs standing to the credit of the employees, upto a maximum of 90 days, be entitled for full leave salary. The Head of Office shall draw the leave salary on encashment of leave on private affairs, as in the case of encashment of earned leave; and

(b) Full leave salary including Dearness Allowance and all other allowances normally admissible while going on leave during service be allowed for the entire period of earned leave encashment at the time of retirement.

3. The above orders shall apply to All India Service Officers serving under the State Government.

4. These orders shall also apply to the following categories of employees:-

a) those retiring on medical invalidation;

b) those retrenched from Government service;

c) those permitted to retire from service without prejudice to the disciplinary proceedings pending against them;

d) in the case of death of an employee while in service

e) to those going on voluntary retirement; and

f) those sent on compulsory retirement.

5. These orders shall take effect from 1st July 1996.

6. Necessary amendments to Tamil Nadu Leave Rules, 1933 will issue separately from Personnel and Administrative Reforms Department.

(BY ORDER OF THE GOVERNOR)

**S. GURUMURTHI,**
SECRETARY TO GOVERNMENT

# தொழில் வளம் பெருகும் தமிழ்நாடு!

## முதலமைச்சர் கலைஞர் பெருமிதம்

"கடந்த ஆறு மாத காலத்தில் நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு உருவாகியுள்ள தொழிற்சாலைகளை நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

550 கோடி ரூபாய் முதலீட்டில் இங்கிலாந்து நாட்டின் "பில்கிங்டன்" நிறுவனம் ஏற்படுத்துகின்ற மிதக்கும் கண்ணாடித் தொழிற்சாலை. அதிலே நமது டிட்கோவிற்கு 11 சதவிகிதம் பங்கு உண்டு.

30 கோடி ரூபாய் முதலீட்டில்- மறைமலை நகரில் ஜப்பானைச் சேர்ந்த "பியூஜி குரா" நிறுவனம் ஏற்படுத்தும் பைபர் கேபிள் தயாரிக்கும் தொழிற்சாலை.

350 கோடி ரூபாய் முதலீட்டில் கொரியாவைச் சேர்ந்த "கும்ஹா" டயர் கம்பெனி ஏற்படுத்தும் ரீடயல் டயர் தொழிற்சாலை.

38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் டிட்கோவை அசோசியேட் முகவராகக் கொண்டு பொள்ளாச்சியில் கல்கத்தாவைச் சேர்ந்த "ராய் சுரானா" நிறுவனம் தொடங்கும் தேங்காயை மூலப்பொருளாகக் கொண்ட தொழிற்சாலை.

மேலும், தூத்துக்குடிக்கு அருகில் மீளவிட்டான், தெற்கு வீரபாண்டியபுரம் ஆகிய கிராமங்களில் "சிப்காட்" தொழில் மைய விரிவாக்கத் திட்டத்திற்கு 35 கோடி ரூபாய் மதிப்புடைய 650 எக்டேர் நிலத்தைக் கையகப்படுத்த உரிய ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன.

அண்ணா மாவட்டத்தில், கீழ்க்கரணை கிராமத்தில் ஆப்டிகல் பைபர் டெலிகாம் கேபிள் திட்டத்திற்கு, டிட்கோவிற்கு முன் நுழைவு வழங்க அரசு பரிசீலித்து வருகிறது.

## வெளிநாட்டு முதலீடு: நன்மைகள்

**"இன்றைய உலகின் நிலையில் ஹென்ரி போர்டின் 1903-ஆம் ஆண்டின் நிலையை அடைவது இயலாது. எனவே நாம் 1996-ஆம் ஆண்டின் நிலையை அடைய தாவிக் குதிக்கவேண்டும். இது நவீன உலகத்தைப் புரிந்து கொள்வதற்கு நமக்கு மிகவும் முக்கியமானது. அதனால்தான் நம்முடைய முயற்சிகளை அதிகரிக்கும்போது வெளிநாட்டு முதலீட்டுடன் நாம் நிதி வளங்களை விரும்புகிறோம். அது இந்தியாவின் வளர்ச்சிக்கு முக்கியத் தேவையாகிவிட்டது. ஏனெனில் வெளிநாட்டு நேரடி முதலீடு நமக்குத்தேவையான மூலதனத்தோடு நவீன தொழில்நுட்பத்தையும், நவீன அமைப்பையும், சந்தை அனுபவத்தையும், திறன்மைகளின் வளர்ச்சியையும் கொண்டுவருகிறது.**

**இந்த நேரத்தில் நாம் ஹூண்டாய் மோட்டார் இந்திய நிறுவனத்தைப் பார்க்கவேண்டும். அவர்கள் எந்தவிதமான சி.கே.டி, எஸ்.கே.டி. இறக்குமதிகளும் இல்லாமல், கார்களை உற்பத்தி செய்யவிருக்கின்றனர். அவர்களுடைய உள்நாட்டுப் பொருட்களின் விகிதம் முதலாண்டு உற்பத்தியின்போது 70 சதவிகிதமாக உள்ளது. 3 அல்லது 4 ஆண்டுகளில் அது 95 சதவிகிதமாக உயரவிருக்கிறது. அவர்கள் 2001 ஆம் ஆண்டில் 100 சதவிகிதம் இந்தியப் பொருட்களைக் கொண்டே காரைத் தயாரிக்கவிருக்கின்றனர் என்பதை அறிய மகிழ்ச்சியாக உள்ளது. அது கொரிய இந்திய வர்த்தக ஒத்துழைப்பின் அடையாளமாக இருக்கும்.**

**சென்னை பெங்களூர் மங்களூர் நெடுஞ்சாலையை 4 வழிப்பாதையாக மாற்ற ஆசிய வளர்ச்சி வங்கியை அணுகியுள்ளோம். இத்திட்டங்கள் நம்முடைய போக்குவரத்து அமைப்புக்கு உத்வேகத்தை அளிக்கும்.**

**-திரு. முரசொலி மாறன்**

**(மாண்புமிகு மத்தியத் தொழில்துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய கார் தொழிற்சாலை விழாத் தலைமை உரையிலிருந்து.)**




### அரசின் அணுகுமுறை

கடந்த ஆறு மாதத்தில் கழக அரசின் அணுகு முறையைக் கேள்விப்பட்டு ஏராள மான தொழில் முனைவோர் தமிழகத்திற்கு வந்தவண்ணமுள்ளனர்.

இப்பொழுது புகழ்வாய்ந்த வெளிநாட்டு நிறுவனங்களெல்லாம் வந்து தமிழக அரசிடம் பேசிக் கொண்டிருக்கின்றன. நிலக்கரி, இரும்புத்தாது பற்றாக்குறை என்பதால் மோட்டார் தொழிற்சாலைகள் மின்னணு தொழிற்சாலைகளைத் தமிழகத்தில் தொடங்க நல்ல வாய்ப்பு உள்ளது. எனவே, மோட்டார் வாகன உற்பத்தித் தொழிலை முதல் கட்டமாக ஊக்குவிக்கப்படவேண்டிய தொழிலாக ஆயிரத்து ஐநூறு கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு செய்யும் தொழில்களை 'சூப்பர் மெகா திட்டம்' எனப் பாகுபாடு செய்து பல்வேறு சலுகைகள் அளிக்கப்படுகின்றன. அந்த அடிப்படையில் ஹூண்டாய் நிறு வனத்திற்குச் சலுகைகள் வழங்கப்படுகின்றன. சூப்பர் மெகா திட்டத்திற்கான சலுகைகள் விற்பனை வரியைத் தள்ளிப் போடுதல், வரிவிலக்கு அளித்தல், மின் கட்டணச் சலுகை, முதலீட்டு மானியம் போன்றவை களாகும். மேலும் அதிக முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் சூப்பர் மெகா திட்டத்திற்காக வரையறுக்கப்பட்ட முதலீட்டு வரம்பினை அண்மையில் நடைபெற்ற தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, ஆயிரத்து ஐநூறு கோடி ரூபாயிலிருந்து ஆயிரம் கோடியாகக் குறைக்கவும் இந்த அரசு முடிவு செய்துள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்திற்கு மேலும் வரவிருக்கின்ற மோட்டார் தொழிற்சாலைகள் நூற்றி எழுபத்தி ஐந்து கோடி ரூபாய் முதலீட்டில் 'நியூ ஹாலண்ட்' என்ற நிறுவனம் டிராக்டர் தொழிற்சாலை நிறுவ முன்வந்துள்ளது. இந்துஸ்தான் மோட்டார் நிறுவனம் 400 கோடி ரூபாய் முதலீட்டில் கார் தொழிற் சாலை அமைக்க இருக்கிறது. 'அசோக் லேலண்ட்' நிறுவனம் ஆயிரத்து எண்ணூறு கோடி ரூபாய் முதலீட்டில் டிரக் தொழிற் சாலை ஒன்றை நிறுவ முன் வந்துள்ளது. 'ஹூண்டாய் மோட்டார் கார் தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சம் கார் உற்பத்தி செய்வதாக அறிவித்துள்ளது. அது எதிர்காலத்தில் இரண்டு இலட்சமாக அதிகரிக்கப்படும் என்றும் உறுதியளித் துள்ளது. தென் கொரியாவில் கார் உற்பத்தியில் முதன்மையான இடத்தை வகிப்பது இந்த ஹூண்டாய் நிறுவனமாகும்.

**தன்னம்பிக்கை**

மாபெரும் செயல்களை நிறை வேற்றிட முதலில் தேவைப்படுவது தன்னம்பிக்கையே.

**-சாமுவேல் ஜான்சன்**



# ஹூண்டாய் எலக்ட்ரானிக்ஸ்

தென்கொரியாவின் திரு வாளர்கள் ஹூண்டாய் எலக்ட் ரானிக்ஸ் இன்டஸ்ட்ரீஸ் கம்பெனி லிமிடெட் 1983-ஆம் ஆண்டு நிறுவப்பெற்றது. தற் போதைய தொழிலாளர் திறன் சுமார் 20,000 மற்றும் முதலீடு சுமார் 29.8 கோடி அமெரிக்க டாலர்கள் உள்ள இந்த நிறுவனம் இந்த ஆண்டு உற்பத்தி அளவு சுமார் 600 கோடி அமெரிக்க டாலர் அடைவதற் கான விரிவாக்க திட்டங்களைத் தீட்டியிருக்கிறது. மற்றும் தொடர்ந்து அதிநவீன தொழில், துறையான செமிகண்டக்டர்ஸ், டிஎஃப்டி, எல்சிடி, மல்டிமீடியா மற்றும் தொலைத்தொடர்பு ஆகியவற்றிலும் முன்னணி வகிக்கின்றது.

அவர்களின் தொழில் முதலீடு அமையச்செய்ய, வசதி செய்யப்படுகிறது. அரசு நிறுவன மான தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) இந்த முயற்சியில் வெற்றிகண்டு பன்னாட்டுப் புகழ் பெற்ற நிறு வனமான ஹூண்டாய் எலக்ட் ரானிக்ஸ் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்துடன் கூட்டாக உற்பத்தித் தொழில் நிறுவ முடிவுசெய்யப்பட்டுள்ளது.

தொடங்கப்படவிருக்கும் இந்தக் கூட்டு நிறுவனம் முதற் கட்டமாக விற்பனை மற்றும் விற்பனைக்குப்பின் வேண்டிய பழுது நீக்கப்பணிகளை மேற் கொள்ளும்.

**மிகப்பெரும் தொழிற்சாலை**

தமிழ்நாட்டில் இப்போது தொடங்கப் படுகின்ற ஹூண்டாய் தொழிற்சாலைதான், கொரியாவிற்கு வெளியில் தொடங்கப்படும் மிகப்பெரிய தொழிற்சாலையாகும். முதல் கட்டத்திலே இந்தத் தொழிற்சாலை வரும் ஐந்தாண்டுகளில் இரண்டாயிரத்து நானூற்றி ஐம்பது கோடி ரூபாய் முதலீடு செய்ய அனுமதி பெற்றுள்ளது.

அடுத்த ஐந்தாண்டுகளில் விரிவாக்கத் திட்டத்திற்காக ஆயிரத்து நானூறு கோடி ரூபாய் செலவிட இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. ஆக பத்தாண்டுகளில் இந்த நிறுவனத்தின் மொத்த முதலீடு 1.1 மில்லியன் அமெரிக்க டாலராக இருக்கும். இந்தத் தொழிற்சாலை மூலம் இரண்டாயிரம் முதல் மூவாயிரம் பேருக்கு நேரடியாக வேலைவாய்ப்புக் கிடைக்கும். இருபதாயிரம் முதல் முப்பதாயிரம் பேருக்கு இது தொடர்பான வேலைவாய்ப்புகள் கிடைக்கும். இந்தப் பகுதி முழுவதும் செழிப்புள்ள பகுதியாக மாறுவதற்கு இன்று நடைபெறுகிற தொடக்க விழா வழிவகுக்கும்.

**அந்நியச் செலாவணியை உயர்த்தும்**

முதலாண்டு உற்பத்திக் காலத்தில் இத்தொழிற்சாலை 70 சதவிகித அளவிற்கு உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தும். 2001 ஆம் ஆண்டு அது 100 சதவிகிதமாக மாறும். 1999ல் நிறுவனத்தின் ஏற்றுமதி 54.1 மில்லியன் அமெரிக்க டாலராக இருக்கும். 2003ல், அது 267 மில்லியன் டாலராக உயரும். அந்நியச் செலாவணி கையிருப்பை இது கணிசமாக உயர்த்தும். இத்தொழிற்சாலைக்கு உதிரிபாகங்கள் (ஆன்சிலரி) வழங்க் சென்னையில் இந்த நிறுவனத்தைச் சேர்ந்த சுமார் 10 பெரிய நிறுவனங்கள் தொடங்கப்படவிருக்கின்றன. அதன் முதலீடு 370 கோடி ரூபாயாக இருக்கும். இந்தத் தொழிற்சாலைக்காகத் தேவைப்படும் 500 ஏக்கர் நிலத்தை, சுமார் 3 மாத காலத்திலே கையகப்படுத்திச் சாதனை புரிந்துள்ள தமிழக அரசு அதிகாரிகளை எல்லாம் நான் பாராட்டக் கடமைப்பட்டி ருக்கின்றேன்".

**-10.12.1996 அன்று, ஸ்ரீபெரும்புதூர் அருகே உள்ள இருங்காட்டுக்கோட்டையில் தென் கொரியாவின் 'ஹூண்டாய் கார்' தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டிப் பேசியதிலிருந்து.**



இரண்டாம் பரிசு பெற்ற கவிதை

# இன்றுபோல் என்றும் இரும்!



எம்மதமும் சம்மதமாம் ஏற்றமிகு கொள்கையினை
நம்முயிரில் ஊன்றல் நலமன்றோ? - நம்முள்ளே
என்றும் பிரிவினைகள் எள்ளளவும் இன்றியே
இன்றுபோல் என்றும் இரும்!

வீட்டிற் கொருகுழந்தை வீட்டிற் கொருமரமாம்
நாட்டிற் குரிய நலத்திட்டம்! - நாட்டின்கண்
என்றும் ஒருமைப்பா டேற்றமுறத் தொண்டாற்றி
இன்றுபோல் என்றும் இரும்!

அன்புள்ளம் ஆன்ற அறிவுடைமை எவ்வுயிரும்
தன்னுயிர்போல் போற்றும் தனிக்கருணை இன்முகத்தோ(டு)
ஒன்றே குலமென்று உவந்தே உறவாடி
இன்றுபோல் என்றும் இரும்!

உள்ளத்தால் பொய்யா தொழுகி அறமோடு
வள்ளுவன் காட்டும் வழிநின்றே வெள்ளம்போல்
குன்றா மனிதநேயக் குன்றாய் மிகவிளங்கி
இன்றுபோல் என்றும் இரும்!

-மழலைக் கவிமணி அருவி







# புற்று நோய்

டாக்டர்
ஜெயந்தி ஸ்ரீநிவாஸ்

நண்டுப்பிடி என்றொரு வழக்கியல் நம்நாட்டில் உண்டு. எதிரி தப்பிவிடாமல் ஒருவரை முரட்டுத்தனமாகப் பிடிப்பதைக் குறிக்கும் தொடர்தான் அது.

அவ்வாறு, மனித உடலைத் தாக்கக்கூடிய ஆபத்தான நோய்களில் ஒருசில, அத்தகைய தன்மை உடையவையாக உள்ளன. அவற்றில் ஒன்றுதான் கான்சர் அல்லது புற்றுநோய் என்று குறிப்பிடப்படுகிறது.

அந்நிய மொழி ஒன்றில் Cancer என்பதற்கு நண்டு என்று பொருளாம், சொல்கிறார்கள், இதனால் ஆங்கில அகராதிகளும் அவ்வாறே குறிப்பிடுகின்றன. புற்றுநோயானது ஓரிடத்தில் உண்டாகி, அவ்வாறு தாக்கிய உறுப்புகளில் வேகமாகப் பரவுவதோடு, அவற்றைவிட்டு எளிதில் நீங்காது பிடித்திருக்கும். உடலில் வேறு பகுதிகளிலும் தலைதூக்கும். இதனால் தானோ என்னவோ, இந்நோய்க்கு அவ்வாறு பெயர் சூட்டப்பட்டது போலும்.

★ Cancer என்றால் என்ன?

மனித உடலின் மைய அமைப்பான, செல் (Cell) களில், தன்னியக்கத் (exogenous) தினாலோ(endogenous)அல்லது புற இயக்கங்களினாலோ உண்டாகும் மாறுதல்கள் அந்தச் செல்களை எண்ணிக்கையிலும் அளவிலும் கட்டுப்பாடற்று வளரச் செய்வதுதான் புற்றுநோய் எனப்படும். சின்னஞ்சிறு துகள்கள் சேர்ந்து, புற்றுகள் உண்டாவதைப் போல் உண்டாகக்கூடியது இந்தக் கொடிய நோய்.

இந்நோயானது மனித உடலின் தலை முதல் கால் வரையிலுள்ள எந்த உறுப்பினையும் தாக்கக்கூடிய தன்மையுள்ளது. ஏனென்றால், மனித செல்களில் ஏற்படுகின்ற கட்டுப்பாடற்ற வளர்ச்சி தானே அது.

★ எப்படி? யாரை?

Cancer is an enigma என்பார்கள். எப்படி, எதனால், யாரை எதற்கு-என்று ஒரு காரணமுமில்லாமல்-கோட்பாடற்றுத் தாக்கக்கூடிய தன்மை புற்றுநோய்க்கு உண்டு, இருப்பினும், உலகில் உள்ள மருத்துவர்களும் விஞ்ஞானிகளும் தங்கள் நீண்ட, கடின, ஆராய்ச்சிகளில் பயனாக ஒரு சில காரணங்களையும், தன்மைகளையும், கண்டு தெளிவுற்றிருக்கிறார்கள்.

புற்றுநோயானது யாரையும் தாக்கலாம், பிறந்த பச்சிளங்குழந்தை முதல், முதியோர் வரையிலும் இது தாக்கும்.

இருப்பினும், வயதுமுதிர்வடைய அடைய இதன் நிகழ்வு விகிதம் (Incidence Rate) அதிகரிக்கும்.

அதேபோல் குழந்தைப் பருவத்தில் (Paediatric age group) உள்ளவர்க்கு வரக்கூடியவை என்று சிலவகையான புற்றுநோய்கள் உண்டு. உதாரணமாக 1.Retinoblastoma 2. Nephroblastoma 3.Leukimia/Lymphoma ஆகியவை அவற்றுள் சில.

ஆண்-பெண் விகிதாசாரம் மட்டுமே மாறுபடக்கூடும்.

இதற்கு புவியியல் அமைப்பும்கூட (Geographical distribution) உண்டு.

அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைய வல்லது புற்றுநோய் அது அமையக்கூடிய உறுப்புகளின் அடிப்படையில் அதற்குப் பெயர் விளக்கம் உண்டு.

மனித உடறுப்புகள் கருவிலேயே மூன்று விதமான தசை மண்டலங்களோடு உருவாக்கப் படுகிறது.(Ectoderm, Endoderm, Mesoderm)

வெளிதசை மண்டலம்_ (Ecto) உ.கு. தோல், நரம்புகள், நடு தசை மண்டலம் (Meso) -எலும்பு, ரத்தநாளங்கள் ரத்தணுக்கள் போன்றவை.

உட்தசை மண்டலம் (Endo) குடல், வயிறு, போன்றன. அவ்வாறு அது உருவாகும் மண்டலத்தைப் பொறுத்து அவைகள் Carcinoma Sarcoma. என்று இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. மேலும், இவற்றிலும் கூட உட்பிரிவுகளும் இருக்கின்றன.

**★ எப்படி ஏற்படுகிறது?**

கட்டுப்பாடற்ற வளர்ச்சியினால் நிகழும் தசை மாற்றங்கள் இரு வகைப்படும்.

1. Benigm சாதாரண, பரவாத, சிகிச்சை முழுப்பலன் அளிக்கக்கூடியது.
2. Malignant ஆபத்து மிகுந்து, விரைவில் பரவக்கூடிய சிகிச்சைகள் ஓரளவே பயன்தரக் கூடியதாகும்.

கட்டுப்பாடற்ற அசுர வளர்ச்சிக்கு ஆளாகும் செல்கள், ஏன், எவ்வாறு எதனால் என்பது, ஓரளவே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முன் சொன்னது போல், புற்றுநோய் இன்னும் புதிராகத்தான் உள்ளது. (Cancer is still an enigma) மேலே சொன்னது போல் இரு பெரும் காரணங்கள் உள்ளன.

**★ Exogenous**

புற நிகழ்வுகளினால் பாதிப்பு ஏற்படக்கூடியவை. இவற்றினை. அறிந்து கொள்வது மிகவும் அவசியம். ஏனென்றால், அப்போதுதான் நோய் தடுக்கத்தக்க வழிமுறைகளை அறியமுடியும்.




## பேச்சுக்கலை

பேச்சுக்கு எட்டு அம்சங்கள் உண்டு. அவை: அ. உண்மை பேசுதல், ஆ. இனிமையாய்ப் பேசுதல், இ. நன்மையைப் பேசுதல், ஈ. சிந்தித்துப் பேசுதல், உ. நிதானமாகப் பேசுதல், ஊ. சமயோசிதமாகப் பேசுதல், எ. அன்பாகப் பேசுதல், ஏ. சபையறிந்து பேசுதல்.

**-கிருபானந்த வாரியார்**

**I. தோள்கள்ில் ஏற்படக்கூடிய புற்றுநோய்**

சூரியக் கதிர்களின் அதிக வீச்சின் பாதிப்பால் உண்டாகக்கூடியது. அதிர்ஷ்டவசமாக, இது நம் நாட்டினரை அதிகம் பாதிப்பதில்லை, வெள்ளையர்களையும் மேற்கத்தியர்களையும் தான் (Whiterace) அதிக அளவில் பாதிக்கிறது.

மேலும் தொடர்ந்த உரசல் (Friction) ஏற்படக்கூடிய இடங்களிலும், Caustic Substance தொடர்ந்து உபயோகிப்பதாலும், ஏற்கனவே உள்ள கட்டிகளிலும், புண்களையும் அலட்சியம் செய்வதாலும் சருமத்தில் உண்டாகலாம்.

**★ II. காது, மூக்கு, தொண்டை**

வாய், மற்றும் நாக்கில் உண்டாகக்கூடிய cheeck & tongue நம் நாட்டினை அதிக அளவில் பாதிக்கிறது. இதில் முக்கியமாக வாயில் புகையிலை அடைப்பதாலும், தற்போதைய புதுப்பழக்கமான பான் மசாலா, குட்கா போன்வற்றை மெல்லுவதாலும் ஏற்படக்கூடியது. கூரிய பற்கள் உராய்வதாலும் உண்டாகலாம்.

**★ III. நுரையீரல்**

Bronchogenic-ca

80% காரணமாக விளங்குவது புகை பிடிப்பது.

**★ IV. குடல் மற்றும் வயிறு கல்லீரல்**

உண்ணும் உணவுப் பழக்கங்களினால் ஏற்படக்கூடியவைகள் குறிப்பிடத்தக்கவை.

1. சிலவகைக் காளான்கள்
2. Smoked fish

3. Recycling of used oil

4. Low Fibre diet

5. மருந்து வகைகள் சில கல்லீரல் புற்றுநோய் உண்டாக்கும் தன்மை உடையவை.

**★ V. இரத்தம் மற்றும் சார்புடைய செல்கள்**

கதிர் வீச்சு பாதிப்பு முக்கிய காரணமாகும். இன்னும் Hiroshima இதற்கு கட்டியம் கூறுகிறதே.

**அறிகுறிகள்-சிகிச்சைகள்**

பலர் நினைப்பது போல, இந்நாட்களில் கான்சர் என்றவுடனே, பீதி அடைய வேண்டிய அவசியம் இல்லை. மருத்துவ மற்றும் விஞ்ஞான வளர்ச்சிக்கு நன்றி. நவீன அறுவை சிகிச்சை மற்றும் மருந்து மற்றும் கதிரியக்க இயந்திரங்களினால் எத்தனையோ உயிர்கள், இந்த நண்டுப்பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கின்றன.

புற்றுநோய்க்கான சிகிச்சையை நாம் மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. அறுவை சிகிச்சை (CNCO Surgery)

2. மருத்துவச் சிகிச்சை (Medicaloncology.)

3. கதிரியக்கச் சிகிச்சை (Irradiation)

புற்றுநோய் (Cancer) சிகிச்சையின் தாரக மந்திரம்:

``Sooner the better" எவ்வளவு விரைவில் இந்நோய் அடையாளம் கண்டு கொள்ளப்படுகிறதோ அவ்வளவு நல்லது.

ஏனென்றால் நோய் ஆழமாகவும் அங்கம் முழுதும் அகன்றும் பரவப் பரவ சிகிச்சை பயனளிக்கமாலும், சுகப்படாமலும் போகும் வாய்ப்புண்டு. அது உயிருக்கே ஆபத்தாகவும் கூடும்.





முளையில் கிள்ளுவதுதான் சாலச் சிறந்தது ஆகும்.

**★ தடுக்கும் முறை**

1. நாற்பது வயதுக்கு மேற்பட்டோர் அவசியம் ஆண்டுக்கு ஒருமுறையேனும் Cancer Screening க்குத் தங்களை உட்படுத்திக் கொள்ள வேண்டும்.

2. புகைபிடிப்பது, புகையிலை அடக்குவது, குட்கா உபயோகிப்பது, போன்றவற்றை அறவே அகற்றுவது நல்லது.

3. கூரிய பற்களாலோ, ஆடை ஆபரணங்களினாலோ நிரந்தர உராய்வு ஏற்படாமல் பாத்துக் கொள்ள வேண்டும்.

4. உணவுப் பழக்கங்களில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

5. புற்றுநோயோ என்று சில சந்தேகம் இருந்தாலும், அலட்சியப்படுத்தாமல், மருத்துவ ஆலோசனை உடனே பெறுதல்.

6. கதிரியக்க மற்றும் இரசாயானப் பொருட்கள் மிகுந்த இடங்களில் வேலை செய்பவர்கள் தகுந்த (Protective Devices) தற்காப்புக் கருவிகள் உபயோகப்படுத்துதல் நலந்தரும்.

7. உடல் மற்றும் மன நலத்தைச் சீராகப் பேணிப் பராமரித்து வரவேண்டும்.

இவைகளின் மூலம் புற்றுநோயிலிருந்து ஓரளவுக்காவது நாம் தப்பிக்கமுடியும் என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

**★ பொது அறிகுறிகள்**

பொதுவானவை (General constitutional symptoms) பசியின்மை, உடல் மெலிதல், சோர்வு, லேசான தொடர்ந்த காய்ச்சல் (Lowgrade fever) அசாதாரண ரத்தக்கசிவு.

குறிப்பானவை (Specific symptoms sighs) கடினமாக வலியில்லாத கட்டிகள் அல்லது மருக்கள் அல்லது கரணைகள் போன்ற புதிதாக முளைத்த அல்லது ஏற்கனவே இருப்பற்றில் வலி உண்டாகுதல், ரத்தம் கசிதல் போன்றவை.

Ulcers வாய், தொண்டை, காது, மூக்கு பகுதிகளில் உள்ள புண்கள் உடலின் மேற்பரப்பின் ஆறாத வலியில்லாத புண்கள்.

உடலுறுப்பின் செயல்பாட்டில் குறைபாடு, (Brain) மூளைக்கட்டிகளினால்-தலைவலி, கண்பார்வை குறைதல்-வலிப்பு முதலியவை.

1. Pharynx Lerynx Esaphagus உணவுக் குழாயிலோ, மூச்சுக் குழாயிலோ அடைப்பது போன்ற உணர்வு,குரலின் ஒலித் தன்மைமாறுதல் முதலியன.
2. வயிறு மற்றும் குடல்: பசியின்மை, வாந்தி, மலச்சிக்கல், மலத்தில் தொடர்ந்து ரத்தம், குடல்-பசியின்மை, வாந்தி, மலச்சிக்கல், மலத்தில் ரத்தம் தெரிதல், மஞ்சள் காமாலை, வயிற்றுவலி போன்றவையாகும்.

Genitals பெண்களைத் தாக்கக்கூடிய கான்சர் மூன்றில் ஒரு பங்கு பிறப்பு உறுப்புகளில் ஏற்படும். அதன் அறிகுறிகள் பின்வருமாறு

1. அசாதாரண ரத்தம் கசிதல் (Menometorhagia)
2. கட்டுப்பாடற்ற மாதவிடாய் சுழற்சி (Menstrual cycle) ஏற்படும்.
3. வெள்ளைப்படுதல்.

இந்த வகையில் மார்பகப் புற்றுநோய் இங்கே அவசியம் குறிப்பிடத்தக்கது ஆகும். மார்பகங்களில் வலியற்ற கரணைகள், மார்புக் காம்புகளில் இரத்தக் கசிவு போன்றவை ஏற்படும்.

ஆண்களுக்கு சிறுநீர் கழிப்பதில் அடைப்பு

சிறுநீரில் ரத்தம் படுதல் (Haematuria)

விரை வீக்கம் போன்றவை.

**★ நுரையீரல்**

ஆண்களை பெரும்பாலும் பாதிக்கக்கூடியது (Bronchigenic ca) தொடர்ந்து இருமல், சளி, சளியில் ரத்தம் வருதல் (Haemoptysis) போன்றவையாகும்.

**அப்படியா சேதி!**



* உலகிலேயே பெண்களுக்குக் கட்டாய இராணுவப் பயிற்சியளிக்கும் ஒரே நாடு இஸ்ரேல்!

* நாய்க்கு மோப்ப சக்தி அதிகம்; அதேபோல், ஒட்டகத்தின் பார்வை சக்தி அதிகம் வெகு தொலைவில் இருக்கிற நீர்நிலையைக்கூட அது எளிதாகக் கண்டுபிடித்து விடும்!





* சுவிட்சர்லாந்து நாட்டிற்கு எந்த நாட்டுடனும் கூட்டு இல்லை; இதனாலேயே ஐக்கிய நாடுகள் சபையில் அந்த நாடு இன்னமும் உறுப்பு நாடாகவில்லை!

* அமெரிக்காவில் உள்ள மக்கள் பத்துப்பேரில் ஒருவர் நீக்ரோவாக இருப்பார்; இதைவிட அதிசயம், அங்கே ஆண்களைவிட ஏறத்தாழ 50 இலட்சம் என்ற அளவில் பெண்கள் அதிகமிருக்கின்றனர்!





* புலிகளுக்கு வெள்ளை நிறம் அச்சமுண்டாக்குவதாகும்; யானைக்கோ வெள்ளை நிறம் கோபத்தை உண்டாக்கும். இதனாலேயே வனப் பகுதிகளில், எல்லைக் கல்லைக்கூட பச்சை நிறத்தில் நட்டிருப்பார்கள்!

-'ராஜு'




# தீவிர போலியோ ஒழிப்புத் திட்டத்தில் குழந்தைகளுக்கு ஒரு பவுன் பரிசு!

நாடு தழுவிய தீவிர போலியோ ஒழிப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் டிசம்பர் 7ஆம் தேதி 5 வயதுக்கு உட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் போலியோ சொட்டு மருந்து போடும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. ஜனவரி 18ஆம் தேதியும் இத்திட்டம் தொடர உள்ளது.

இந்தத் திட்டம் முழு வெற்றி அடையவேண்டுமானால், 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் அனைவருக்கும் ஏற்கெனவே முறையாகத் தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டிருந்தாலும், இத்திட்டத்தின் அவசியம் கருதியும், தமிழ்நாட்டிலுள்ள 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் அனைவரும் இத்திட்டத்தில் கலந்துகொண்டு சொட்டு மருந்து போடுவதை ஊக்குவிக்கும் வகையிலும், தமிழ்நாடு அரசு குழந்தைகளுக்குப் பரிசு வழங்கும் சிறப்புத் திட்டத்தை அறிவித்துள்ளது.

### தங்க நாணயம்

இப் பரிசுத் திட்டத்தின்கீழ், 2 தவணை சொட்டு மருந்து கொடுக்கப்படும். ஒவ்வொரு குழந்தைக்கும் அடையாள எண் கொடுக்கப்படும். அவ்வாறு இரண்டு தவணை சொட்டு மருந்து பெறும் அனைத்துக் குழந்தைகளின் எண்களையும் மாவட்டந்தோறும் தனித்தனியே குலுக்கல் முறையில் தேர்ந்து எடுத்து, அதிர்ஷ்டசாலியான குழந்தைகளுக்கு முதல் பரிசாக ஒரு பவுன் தங்க நாணயம் பரிசு வழங்கப்படும்!

மேலும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டாவது பரிசாக 2 குழந்தைகளுக்கு அரைப் பவுன் தங்க நாணயமும், 3வது பரிசாகத் தலா ரூ.250 மதிப்பில் 20 குழந்தைகளுக்குப் பரிசும் வழங்கப்படும்.

எனவே, பெற்றோர்கள் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் அனைவரையும் சொட்டு மருந்து கொடுக்கும் நிலையங்களுக்கு அழைத்துச் சென்று சொட்டு மருந்து கொடுப்பதன் மூலம், தங்கள் குழந்தைகளைக் கொடிய போலியோ நோயிலிருந்து பாதுகாப்பதுடன்- தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள பரிசுத்

> சுறுசுறுப்பாக இருப்பது நல்லது; ஆனால், படபடப்பாக இருப்பது ஆபத்து!
>
> -மாத்யூ கிரீன்

திட்டத்தின் மூலமும் பயனடையலாம்.

சென்ற ஆண்டு தீவிர போலியோ சொட்டு மருந்து திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் 5 வயதுக்குட்பட்ட சுமார் 65 இலட்சம் குழந்தைகளுக்கு 'போலியோ' தடுப்பு மருந்து போடப்பட்டதன் பயனாக இந்த ஆண்டு போலியோ நோய் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 130 லிருந்து 5 ஆகக் குறைந்துள்ளது!

இந்த ஆண்டில் டிசம்பர் 7ஆம் தேதி போலியோ சொட்டு மருந்து முகாம் நடத்தப்பட்டது; ஜனவரி 18ஆம் தேதியும் போலியோ தடுப்பு சொட்டு மருந்து போடுவதற்கு முகாம்கள் நடத்தப்படவுள்ளன. இதற்காக சுமார் 40,000 நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் 5 வயதுக்குட்பட்ட சுமார் 65 இலட்சம் குழந்தைகளுக்கும் போலியோ தடுப்பு சொட்டு மருந்து கொடுக்கப்படும் எனவும், இதன்மூலம் போலியோ நோயை முழுவதுமாக ஒழிக்க முடியும் எனவும், போலியோ ஒழிப்புத் திட்ட மாநில ஆலோசனைக்குழு நம்பிக்கை தெரிவித்திருக்கிறது.

போலியோ தடுப்பு மருந்து முகாம்களுக்குத் தேவையான கூடுதல் பணியாளர்கள் மற்றும் வாகனங்கள் அனைத்து அரசுத் துறைகளிலிருந்து பெற்றுக் கொள்வதெனவும் இதற்காக அந்தந்தத் துறை தலைவர்களுக்குத் தலைமைச் செயலர் மூலம் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. அரசுப் பணியாளர்கள் தீவிர போலியோ ஒழிப்புத் திட்டத்தின்போது தங்களை முழுமையாக ஈடுபடுத்தி ஒத்துழைப்புக் கொடுக்கச் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.




நகராட்சி ஆணையர்கள் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி இத்திட்டம் நகர்ப் பகுதிகளில் வெற்றிபெற உதவி செய்யுமாறு, நகராட்சிகளின் கூடுதல் இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

## புதுமுறை விளம்பரம்

போலியோ பற்றி, பேருந்து மற்றும் பால் கவர் மூலம் விளம்பரம் செய்ய, முறையே போக்குவரத்துச் செயலர் மற்றும் கால்நடை பராமரிப்புச் செயலர் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தத் தீவிர போலியோ சொட்டு மருந்து கொடுப்பதற்காகச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளையும், முகாம்களையும் கண்காணிக்கப் பணியாளர்கள் மாவட்ட ஆட்சியாளர் மூலம் அந்தந்த மாவட்டங்களில் நியமிக்கப் பொதுச் சுகாதார இயக்குநர் நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தத் தீவிர போலியோ ஒழிப்பு நாட்களில் ஒரு வாரம் முன்பே, தொடர்ந்து மின்சாரம் கிடைப்பதற்குத் தமிழ்நாடு மின்சார வாரியத்தினைக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

நகர்ப்புறங்களில் குடிசைப் பகுதிகள், விரிவாக்கப் பகுதிகள் மற்றும் அரசு மருத்துவமனைகள் உள்ள இடங்களில் சென்ற ஆண்டையும்விட தீவிர போலியோ நோய் ஒழிப்பில் அதிகக் கவனம் செலுத்தி குழந்தைகள் யாரும் விடுபடாமல் தடுப்பு மருந்து கொடுக்கத் தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் அரசு மருத்துவமனைகளில் புறநோயாளிகளுக்கான சீட்டில் தீவிர போலியோ ஒழிப்புத் திட்டம் பற்றி விளம்பர முத்திரையிட்டு வழங்குமாறும் யோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அனைத்து அரசு அலுவலர்களும் ஆங்காங்குள்ள தன்னார்வ அமைப்புகள் மூலம், இத்திட்டத்தினை முழுமையாகச் செயல்படுத்தி போலியோவை ஒழிக்க உதவிட வேண்டும்.

# தொழுநோய் ஒழிப்பு

தொழுநோய் ஒழிப்பு தேசியத் திட்டம், தமிழ்நாட்டில் 1954-55-ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. தொடக்கத்தில் தொழுநோயாளிகளுக்கு ஒரே மருந்து கொடுக்கப்பட்டு வந்ததால், சிகிச்சைக்கு நீண்ட காலம் பிடித்தது. 'டேப்சோன்', 'ரிபாமோசின்' மற்றும் 'குளோபாஜிமைன்' ஆகிய மூன்று மருந்துப் பொருள்களைக் கொண்டு சிகிச்சை அளிக்கும் முறையை அறிமுகப்படுத்தியதன் மூலம், தொழுநோயாளிகளின் எண்ணிக்கை கணிசமான அளவிற்குக் குறைந்துள்ளது.

மக்கள் தொகையில் 10,000 பேர்களில் 120 பேர்களுக்குத் தொழுநோய் இருந்தது. இந்த விகிதம் 10,000 பேர்களில் 7 பேர்களாகக் குறைக்கப்பட்டுள்ளது என்பதிலிருந்தே- இது மிக நன்றாகப் புலனாகும். தொழுநோய் ஒழிப்புப் பணியில் தமிழ்நாடு மிகச் சிறப்பாகப் பணியாற்றியுள்ளது.

உலக சுகாதார நிறுவனமும், இந்திய அரசும் கி.பி. 2000 வாக்கில் தொழுநோயை உலகிலிருந்தே அகற்றுவதுஎன்ற இலக்கு நிர்ணயித்துள்ளன. தொழுநோயாளர் வீதத்தை 10,000 மக்களுக்கு ஒருவர் என்ற அளவில் குறைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## முனைப்பு முகாம்

இந்த நோயினை முற்றிலும் அகற்றுவதற்கு மாநில அரசு முனைப்புடன் செயல்பட முடிவெடுத்துள்ளது. இதன் முதல்கட்ட நடவடிக்கை தொழுநோயாளர்களைப் பரிசோதனை செய்து, நோய் உள்ளதா என்று கண்டறிவதாகும். தமிழ்நாடு மாநிலத்தில் இன்னும் கண்டறியப்படாதிருக்கும் தொழுநோயாளர்களைக் கண்டறியும் வகையில், 1997 ஜனவரி 27ஆம் தேதி முதல் பிப்ரவரி 2ஆம் நாள் வரையில் ஒரு வார காலத்திற்குத் "தொழுநோய் கண்டறியும் முனைப்பு முகாம்" நடத்தப்படவுள்ளது. இந்த நோக்கத்திற்காகத் தொழுநோய் களப் பணியாளர்கள், மற்றும் 15,000 பல நோக்குச் சுகாதாரப் பணியாளர்கள் ஆகியவர்கள் இப்பணியில் பயன்படுத்தப்படுவார்கள்.

> அரும்பாடு பட்டுப் பெறப்பட்ட' வெற்றியில்தான் மென் மேலும் செய்யவேண்டிய முயற்சியைத் தூண்டக்கூடிய சக்தி இருக்கிறது!
>
> -பெட்ரண்ட் ரஸ்ஸல்

தீவிர தொழுநோய்க் கண்டுபிடிப்பு முகாம் தொடங்குவதற்கு முன்னர் கண்டறியப்படாமல் மறைந்து கிடக்கும் தொழுநோயாளர்களைக் கண்டுபிடிப்பதில் இந்தப் பலநோக்குச் சுகாதாரப் பணியாளர்களுக்கு மருத்துவ ஊரக சுகாதாரப் பணி இயக்குநர் பயிற்சி அளிப்பார்.

இந்நோய் அபாயகரமான நோய் என்ற நிலை கடந்துவிட்டது என்றும், இந்நோயைத் தொடக்கத்திலேயே கண்டுபிடித்துவிட்டால், குறுகிய கால அளவில் இந்நோயினைக் குணப்படுத்திவிடலாம் என்கிற தகவலைத் தொழுநோய்க் கண்டுபிடிப்புப் பிரச்சார முனைப்புத் திட்டம் தொழுநோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்குத் தெரிவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## மூட நம்பிக்கை

மேலும், தொழுநோயுற்றவர்களிடம் தொன்றுதொட்டு இருந்து வருகின்ற மூடநம்பிக்கையை அகற்றி, அவர்களுடைய அச்சத்தைப் போக்கி அவர்கள் பகுத்தறிவுடன் நடத்துகொள்ளுகின்ற பாங்கை வளர்ப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

இத்திட்டத்தின் வாயிலாக இம்மாநிலத்தில் தொழுநோயால் பாதிக்கப்பட்டு, தொழுநோய் கண்டறியப்படாமல் உள்ளவர்களைக் கண்டறிந்து "கூட்டு மருத்துவச் சிகிச்சை" மூலம் அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படும். தொழுநோய் சிகிச்சை பெறுபவர்கள் கணிப்பொறி மூலம் தொடர்ந்து கவனிக்கப்படுவர்.

தொழுநோயை இம்மாநிலத்திலிருந்து அறவே ஒழிக்கப் பொதுமக்களும் அரசுக்கு ஒத்துழைப்புத் தந்து, உதவி புரியவேண்டும்.



# குழந்தைத் தொழிலாளி முறையை முடிவுக்குக் கொண்டுவருதல்

அபாயகரமான தொழில்களிலும், சுய லாபத்துக்கான வேலைகளிலும் குழந்தைகளை ஈடுபடுத்துவது குழந்தை உரிமைகள் சட்டத்தை மீறிய செயலாகும். அத்தகைய தொழிலாளி முறையை அகற்றுவது உடனடியாக மேற்கொள்ளும் நடவடிக்கை, குழந்தையின் சிறந்த நலன்களைக் கருத்தில் கொண்டிருக்க வேண்டும். குழந்தைகளின் நல வாழ்விற்குப் பாடுபடும் திட்டத்தில் முதியோர்களுக்கு வேலைவாய்ப்புக்களை விரிவாக்கும் முயற்சிகள் சேர்ந்திருக்க வேண்டும்.

அபாயகரமான தொழில்களிலும் சுய லாபத்துக்காகவும் குழந்தைத் தொழிலாளிகளை ஈடுபடுத்துவதை உடனே நிறுத்தச் செய்வது

அபாயகரமான, மற்றும் சுயலாபக் குழந்தை ஊழியத்தில் பிணைத் தொழிலாளர், வர்த்த-கரீதியில் பாலியல் தொழிலுக்குப் பயன்படுத்துவது, குழந்தைகளின் உடல், சமூகம், அறிவுணர்வு, மனம் அல்லது தார்மீக வளர்ச்சி ஆகிவற்றுக்கு இடையூறு செய்யும் வேலை ஆகியவை இதில் அடங்கும். இவற்றைப் பொறுத்துக் கொள்ளக்கூடாது. இவற்றை முடிவுக்குக் கொண்டு வர உடனே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்

இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கு வகை செய்தல் பொருத்தமான துவக்கக் கல்வியை எல்லாக்

குழந்தைகளுக்கும் கட்டாயமாகக் கிடைக்கச் செய்து கோட்பாட்டின் 28வது ஷரத்து எல்லாக் குழந்தைகளுக்கும் முழுநேர அடிப்படையில் துவக்கப் பள்ளியில் அந்தப் படிப்பு முடியும் வரையில் படிக்கும்படி பார்த்துக் கொள்வதைப் பொறுப்பாளர்கள் நிறைவு செய்யவேண்டும்.

இதற்கெனத் தேவையான பண வசதிகளைச் செய்தாகவேண்டும். போதிய வசதிகளுக்கு, உதவி செய்வோர் உறுதிசெய்ய வேண்டும்.

குழந்தை ஊழியத்துக்கான காரணங்கள் சிக்கலானவையாக இருப்பதாலும், வறுமை, பொருளாதாரச் சுரண்டல், சமூகப் பண்புகள் மற்றும் கலாச்சாரச் சூழ்நிலைகள் ஆகியவை அடங்கியிருப்பதாலும் தீர்வுகள் விரிவானதாக இருக்கவேண்டும். ஒவ்வொரு சமூகத்திலும் மிக விரிவான வகையில் மக்கள் உரிய பங்கெடுத்துக் கொள்வதாக இருக்கவேண்டும்.

அவசரமாகத் தேவைப்படும் சில குறிப்பிட்ட நடவடிக்கைகள் வருமாறு

விவரச் சேகரிப்பும் கண்காணிப்பும்

குழந்தைத் தொழிலாளர் பற்றிய புள்ளி விவரங்கள் அரிதாக உள்ளன. இந்தப் பிரச்சினையைப் பயனுள்ள வகையில் அணுகவேண்டுமானால் குழந்தைத் தொழிலாளி பற்றி உலக ரீதியாக ஒப்பிடக்கூடிய புள்ளி விவரங்களைச் சேகரித்து ஆய்வு நடத்துவதற்குத் தேசிய, சர்வதேச முறைகளைச் செயல்பட வைக்கவேண்டும். மறந்துபோன அல்லது புலனாகாதக் குழந்தைத் தொழிலாளி பகுதிகளில் தனிக் கவனம் செலுத்தவேண்டும். உதாரணமாக, வீட்டுக்குள், குடும்பம் பண்ணையில் அல்லது வீட்டு வேலையில் ஈடுபட்டுள்ளவர்கள் விஷயத்தில், மக்களே கண்காணிப்பது முக்கியமாகும். வேலை செய்யும் குழந்தைகள் தங்கள் நிலைமைகளை மேம்படுத்துவதற்கான வழிகளை யோசனை கூறுவதிலும் தீவிரமாகப் பங்குகொள்ள வேண்டும்.

விரிவான சட்டப் பாதுகாப்பு

குழந்தைத் தொழிலாளி மற்றும் கல்வி பற்றிய சட்டங்கள் நோக்கத்தில் முரண்படாதபடி கண்காணித்தல் அவசியம். பரஸ்பர ஆதரவு தரும் வகையில் அவற்றைச் செயல்படுத்தவேண்டும். தேசிய குழந்தைத் தொழிலாளிச் சட்டங்கள், கோட்பாட்டுக்குச் சொல்லிலும் கருத்திலும் இணங்கியதாகவும் ஐஎல்ஓ கோட்பாடுகளுக்குப் பொருத்தமாகவும் இருக்க வேண்டும். அத்தகைய சட்டங்கள் தெருக்கள், பண்ணைகள், வீட்டு வேலை அல்லது குடும்பத்துக்குள் வேலை ஆகியவை உட்படப் பொருளாதாரத்தின் முறைசாராத் துறையில் வேலை செய்யும் மிகப் பெரும்பான்மையான குழந்தைகளுக்குப் பொருந்துமாறு நிர்ணயிக்கப்பட வேண்டும்.

எல்லாக் குழந்தைகளுக்கும் பிறப்புப் பதிவு

பிறந்தவுடன் எல்லாக் குழந்தைகளையும் பதிவு செய்ய வேண்டும்.

கோட்பாட்டின் 7வது ஷரத்து குழந்தைகளின் உரிமைகளைப் பயன்படுத்த அனுமதிக்கப் பதிவு



ஒரு நல்ல நூலைப் போலச் சிறந்த நண்பன் வேறு யாருமில்லை!

-அறிஞர் அண்ணா

செய்தல் மிக அவசியமாகும். கல்வி, உடல்நலக் கவனிப்பு மற்ற இதர சேவைகளைப் பெறவும், ஒவ்வொரு குழந்தையின் வயதுச் சான்றை மேற்பார்வையாளர்களுக்கும் இன்ஸ்பெக்டர்க்கும் வழங்குவதற்கும் இது அவசியம்.

**நடத்தை நெறிகள் மற்றும் கொள்கைகள்**

தேசிய மற்றும் சர்வதேச அமைப்புகள் தாங்களோ, தங்கள் துணை அமைப்புகளோ குழந்தைகளை அவர்கள் உரிமைகளை மீறும் சூழ்நிலைகளில் வேலைக்கு அமர்த்திக் கொள்வதில்லை என்று உத்திரவாதமளிக்கும் நடத்தை நெறிகளை ஏற்றுக் கொள்ளும்படி வற்புறுத்துகின்றன. குழந்தையின் சிறந்த நலன்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளையும் உள்ளடக்கியதாக, திருத்தக் கொள்கைகள் உருவாக்கப்பட வேண்டும். யுனிசெப் தனது சொந்த கொள்கையை இவ்வகையில் மீண்டும் உறுதிப்படுத்துகிறது. குழந்தைகளே சுய லாபத்திற்காகப் பயனப்படுத்திக் கொள்ளும் எந்த தரகரிடமிருந்தும் எதையும் வாங்குவதில்லை என்றும் உறுதி எடுத்துக் கொள்கிறது.

**நன்றி: யுனிசெப்**

# தமிழ் மருத்துவம்

## ஆலமரம்

மூன்று ஆலிலையை மென்றால் போதும்- வாய்ப்புண், வாய் நாற்றம் மாறும். இலையை அரைத்து உடலில் பூசிக் குளித்தால் உடல் எரிச்சல், அரிப்பு போன்றவை நீங்கும். தேமல் நோயும் குணமாகும். ஆட்டம் கண்ட பல்லிடுக்கில் அதிகாலையில் சிறிது ஆலம்பால் விட்டால், ஆடுவது நிற்கும். ஆலம் பாலும் சிறிது தேனும் காய்ச்சி அருந்தினால் உடல் வலுவடையும்!

## இலந்தை

இலந்தைக் கொழுந்தை 5 கிராம் அளவிற்கு அரைத்து, அதை 500 மி.லிட்டர் இளநீரில் காலை மாலை ஒரு வாரம் சாப்பிட்டால் மூலநோய் தணியும். சாப்பிட்ட பிறகு இலந்தைப் பழம் தின்றால், உணவு எளிதில் செறிக்கும்; பித்தம் தணியும்; பித்த மயக்கம் குணமாகும். இம் மரத்தின் பட்டையை வெந்நீரில் போட்டுக் குளித்தால் உடல்வலி நீங்கும்.

## அரச மரம்

அரச மரத்தின் காற்றுக்கு, மலடு நீக்கும் சக்தி உண்டு; அரச மரத்தைச் சுற்றும் வழக்கம் இதனால்தான் ஏற்பட்டது. சீனப் பெண்களில் பிள்ளைப்பேறு அற்றோர், அரச மரத்தடியில் உறங்கும் வழக்கம் இன்னமும் உள்ளது. மூன்று அரச இலைக்கொழுந்தோடு சிறிது வெல்லம் சேர்த்துக் காலையில் வெறும் வயிற்றில் உண்டுவந்தால் வயிறு தொடர்பான நோய் நீங்கும்; சூதகக் கோளாறும் குணமாகும்!

## ஈச்சை

ஈச்சம் பழம் பசியைத் தூண்டும்; ஈச்ச ஓலைப்பாயில் படுத்துறங்கிவந்தால், வாத நோய் தணியும்; உடல் சூட்டையும் நீக்கும். ஈச்சங் கள் பெரிதும் உடல் நலத்தைக் கெடுக்கும்!

## எலுமிச்சை

பழம் உலோகங்களை மடிக்கும். சிறிது கொழுந்தைக் கொத்துமல்லி, கறிவேப்பிலையோடு துவையலாக அரைத்துச் சாப்பிட்டால் பித்தவாந்தி அஜீரணம், வாய்வுப் பிடிப்பு குணமாகும். இலையை அரைத்துத் தடவினால் மூட்டுவலி, கெண்டைக் கால் வலி, தலைவலி ஆகியவை நீங்கும். ஊறுகாய் பித்த மூலம், மலக்கட்டு, இரத்தமூலம் தணிக்கும்!

**(ஆதாரம்: 'மரங்களின் மருத்துவப் பயன்கள்' பூங்கொடி பதிப்பகம், சென்னை - 4)**

# வாசகர் இதயம்

கவிஞர் கா.வேழவேந்தன் கவிதை கட்டி வெல்லமாக இனித்தது. உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல் விவரங்களும் தேவையானவை. மொத்தத்தில் தமிழரசு களைகட்டத் தொடங்கிவிட்டது.

-ப.முருகேசபாண்டியன்,
நாகூர் கரப்பாடி.

ஆசிரியர் மடல்கள் சுருக்கமாகவும், சிறப்பாகவும் இருப்பது கண்டுஅகமகிழ்ந்தேன்

-த.பொ.சண்முகசுந்தரம்,
திட்டக்குடி.

ஒய்வூதியம் பெறுவோர்க்கான ஆணை ஒன்றை வெளியிட்டிருந்தீர்கள்; அதேபோல் தொடர்ந்து ஒவ்வொரு ஆணையாக வெளியிடுங்கள்; எல்லோருக்கும் பயனுள்ளதாக இருக்கும்.

-எஸ்.எப். சுந்தரராசன்,
திருச்சிராப்பள்ளி.

தமிழரசில் ஆங்காங்கே தாங்கள் வெளியிடும் பொன்மொழிகள் தங்கத்தில் பதித்த வைரமாக ஜொலிக்கின்றன.

-த.நா.அன்புத்துரை,
சிவசங்கை.

தமிழரசு, பத்திரிகை உலகில் தொடங்கியுள்ள புதிய சேவையைச் சிரம் தாழ்த்திப் பணிகின்றேன்.

-கா.நா.ராஜசேகர்,
மங்களாபுரம்

மருத்துவத் தொடர், இலக்கியக் கட்டுரைகள், அறிவியல் துளிகள் போன்றவற்றால்- தமிழரசைப் பாதுகாத்து வைக்கிற ஆர்வம் உண்டாகிவிட்டது.

-ச.சத்தியசீலன்,
ராமானுஜபுரம் - 636112.

அறிஞர் சொற்பொழிவின் சிலேடைகள், துணுக்குகள் எல்லாம் சேர்த்து இன்னும் புதுமலர் மணத்தைத் தமிழரசுக்கு உண்டாக்கலாமே?

-செ.காமராஜ்,
வேப்பூர் செக்கடி.

சிலம்பொலி செல்லப்பன் கட்டுரை, மு.வ. எழுதிய கதை யாவும் அற்புதம். 'தமிழரசின்' பயணம் இதேபோல் தொடரவேண்டும் என்பது எங்கள் ஆவல்.

-புலவர் மு.செல்லமுத்து,
கோவிந்தப்பாளையம்.

ஹோமியோபதி மருத்துவம் பற்றிய கட்டுரை பல உண்மைகளை உணர உதவியது. நன்றி.

-ச.இராமசாமி,
வேலப்பநாயக்கன் பாளையம்.

'அவனிபோற்றும் ஆறுமாத சாதனை' என்கிற தனிப்பகுதி, நாட்டுமக்களெல்லாம் நாம் எவ்வளவு நல்லரசால் ஆளப்படுகிறோம் என்பதை அறிய உதவும் ஒரு நல்ல கணக்கீடு ஆகும்.

-ச.சிவகோபால்,
சேலம்.

மேயர்கள் பற்றிய விவரங்கள் பாதுகாக்கப்பட வேண்டிய கருவூலம் ஆகும்.

-சோலையப்பன்,
திருப்பத்தூர்.

□□□□□□□□□□



**சீர்திருத்தம்**

சீர்திருத்தம் என்பது தேவையற்றதை நீக்கிவிட்டுத் தேவையுள்ளதை மட்டும் வைத்துக் கொள்ளுதலே ஆகும்.

-தந்தை பெரியார்

□□□□□□□□□□

மாணவர் பக்கம்:

# ஆர்வமே அனைத்துச் சாதனைக்கும் முதல்படி

பாரதத்தில் வெள்ளையர் ஆட்சி செலுத்திய காலம் அது. கைநிறைய பணம், சுகபோக வசதிகள், அரசாங்கத்தின் பாது காப்பு என்று அரசாங்கப் பதவி வகிப்பவர்கள் உல்லாச வாழ்வு வாழ முடிந்தது.

அரசாங்க அலுவல் பார்ப்ப வர்களை ஏதோ கடவுளைத் தரிசிப்பது போல, சாமானிய மக்கள் கண்ட இடமெல்லாம் கைகூப்பி மரியாதை செய்தனர்.

அந்த இளைஞர் வங்காள மாநிலத்தின் உதவி அகௌண் டெண்டு ஜெனரல் பதவியை வகித்து வந்தார். மாநிலத்தின் மிகவும் உயர்ந்த அரசாங்கப் பதவி அது.

கை நிறைய ஊதியம் கிடைத் தது. நினைத்தபடியெல்லாம் உல்லாச வாழ்வு வாழ்வதற்கு நல்ல வாய்ப்புகள் உண்டு.

அந்த இளைஞர் தமது பதவிப் பொறுப்பினை மிகவும் சிறந்த முறையில் நிறைவேற்றி அதிகாரி களின் நன்மதிப்பைப் பெற்றி ருந்தார்.

எதிர் காலத்தில் மேலும் மேலும் உயர் பதவிகள் கிடைப்ப தற்கான வாய்ப்புகள் காத்துக் கொண்டிருந்தன.

அந்த இளைஞருக்குத் தமது பதவியில் பெரிய பிடிப்பும் நாட்டமும் இருக்கவில்லை.

பௌதிக அறிவியல் அறை யிலேயே அவருடைய மனம் அளவற்ற பிடிப்பும் ஆர்வமும் கொண்டிருந்தது.

கல்கத்தாவிலுள்ள கல்கத்தா பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடம் ஒன்று அந் நாளில் அமைந்திருந்தது.

அந்த இளைஞர் அதிகாலை யிலேயே அந்த அறிவியல் ஆய்வுக் கூடத்துக்குப் போய் பல்வேறு விதமான ஆய்வுச் சோதனை களில் ஈடுபடுவார்.

அலுவலக நேரத்தில் அலு வலகம் சென்று பதவிப் பொறுப்பை நிறைவேற்றுவார். மாலையில் அலுவலக நேரம் முடிந்த உடனே ஆய்வுக் கூடத் தைச் சரணடைந்துவிடுவார்.

உற்சாகத்துடனும், ஊக்கத் துடனும் பலவிதமான ஆராய்ச்சி களிலும், சோதனைகளிலும் ஈடு பட்டு உழைத்த பிறகு, நெடுநேரம் கழித்து வீடு திரும்புவார்.

பெரிய பதவியை வகித்து கை நிறைய ஊதியம் பெறும் இவர் ஓய்வு நேரத்தை உல்லாசமாகக் கழிப்பதற்குப் பதில் இதைப் போல் உடம்பை அலட்டிக் கொள் கிறாரே என்று ஆச்சரியப் படுவார்கள்.

கல்கத்தா பல்கலைக்கழகத்தில் துணை வேந்தர் அந்த இளைஞ ருக்கு அறிவியல் துறையில் இருக்கும் பேரார்வத்தைக் கூர்ந்து கவனித்து வந்தார்.

முழு நேரமும் அந்த வாலிபர் தம் மனத்தை அறிவியல் துறை மீதே செலுத்தினால் நாட்டுக்கும் மக்களுக்கும் பெருநலம் விளை யுமே என்று அவர் நினைத்தார்.

அவர் ஒருநாள் அந்த வாலிபரை நோக்கி, நீங்கள் பார்த்து வரும் பதவியை விட்டு விலகி முழு நேரமும் அறிவியல் பணியில் ஈடுபட விருப்பமா? என்று வினவினார்.

அப்படி ஒரு வாய்ப்பு கிடைத்தால் அதைக் கிடைத் தற்கரிய பெரும்பேறாகக் கருது வேன் என்று இளைஞர் உற்சா கத்துடன் மறுமொழி புகன்றார்.

நீங்கள் அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வந்துவிடக் கூடாது. நீங்கள் வகிக்கும் பதவி மாநிலத் திலேயே மிகவும் உயர்ந்த பதவி களில் ஒன்று. நல்ல வருவாய் கிடைக்கிறது. எதிர்காலத்தில் பதவியில் மேலும் மேலும் உயருவதற்கு வாய்ப்புகளுக்குப் பஞ்சமே இல்லை. அறிவியல் ஆராய்ச்சியை வாழ்க்கையெனக் கொண்டு விட்டால் இப்போது கிடைக்கும் வருமானத்தில் கால்பாகம் கூடக் கிடைக்காது.

# தமிழரசு

## நாட்காட்டி 1997



| | ஜனவரி | பிப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | 5 12 19 26 | 2 9 16 23 | 30 2 9 16 23 | 6 13 20 27 | 4 11 18 25 | 1 8 15 22 29 |
| திங்கள் | 6 13 20 27 | 3 10 17 24 | 31 3 10 17 24 | 7 14 21 28 | 5 12 19 26 | 2 9 16 23 30 |
| செவ்வாய் | 7 14 21 28 | 4 11 18 25 | 4 11 18 25 | 1 8 15 22 29 | 6 13 20 27 | 3 10 17 24 |
| புதன் | 1 8 15 22 29 | 5 12 19 26 | 5 12 19 26 | 2 9 16 23 30 | 7 14 21 28 | 4 11 18 25 |
| வியாழன் | 2 9 16 23 30 | 6 13 20 27 | 6 13 20 27 | 3 10 17 24 | 1 8 15 22 29 | 5 12 19 26 |
| வெள்ளி | 3 10 17 24 31 | 7 14 21 28 | 7 14 21 28 | 4 11 18 25 | 2 9 16 23 30 | 6 13 20 27 |
| சனி | 4 11 18 25 | 1 8 15 22 | 1 8 15 22 29 | 5 12 19 26 | 3 10 17 24 31 | 7 14 21 28 |

| | ஜூலை | ஆகஸ்டு | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | 6 13 20 27 | 31 3 10 17 24 | 7 14 21 28 | 5 12 19 26 | 30 2 9 16 23 | 7 14 21 28 |
| திங்கள் | 7 14 21 28 | 4 11 18 25 | 1 8 15 22 29 | 6 13 20 27 | 3 10 17 24 | 1 8 15 22 29 |
| செவ்வாய் | 1 8 15 22 29 | 5 12 19 26 | 2 9 16 23 30 | 7 14 21 28 | 4 11 18 25 | 2 9 16 23 30 |
| புதன் | 2 9 16 23 30 | 6 13 20 27 | 3 10 17 24 | 1 8 15 22 29 | 5 12 19 26 | 3 10 17 24 31 |
| வியாழன் | 3 10 17 24 31 | 7 14 21 28 | 4 11 18 25 | 2 9 16 23 30 | 6 13 20 27 | 4 11 18 25 |
| வெள்ளி | 4 11 18 25 | 1 8 15 22 29 | 5 12 19 26 | 3 10 17 24 31 | 7 14 21 28 | 5 12 19 26 |
| சனி | 5 12 19 26 | 2 9 16 23 30 | 6 13 20 27 | 4 11 18 25 | 1 8 15 22 29 | 6 13 20 27 |

தவிரவும் எதிர்காலத்தைப் பற்றி எந்தவித உத்தரவாதமும் இல்லை. எதிர்காலத்தில் வறுமையில் கிடந்து உழல வேண்டி நேரிட்டாலும் வியப்படைவதற்கில்லை, என்று துணை வேந்தர் உண்மை நிலையினை விளக்கினார்.

“என் எதிர்கால சொந்த வாழ்க்கையைப் பற்றி நான் கொஞ்சமும் கவலைப்படவில்லை. அறிவியல் துறையில் ஏதாவது சாதிக்க முடிந்தால் அதையே பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன் என்று குதூகலம் பொங்கும் மனத்தினராக அந்த இளைஞர் உறுதியான குரலில் கூறினார்.

தமது குரலில் காண்பித்த உறுதியை அந்த வாலிபர் துரிதமாக செயற்படுத்திக் காண்பித்து விட்டார்.

வருவாயும், மதிப்பும் மிகுந்திருந்த தமது பதவியை உடனே தூக்கியெறிந்து விட்டு, வருவாய் குறைவான விஞ்ஞான ஆய்வுக் கூட பதவியை ஏற்றுக்கொண்டார்.

இவ்வாறு தமது வாழ்க்கையினைப் பெருஞ்சோதனைக்கு உள்ளாக்கிக் கொண்டதற்காக அந்த வாலிபர் ஒருநாளும் வருத்தப்பட்டதே கிடையாது.

அந்த வாலிபர் மேற்கொண்ட அந்தத் தியாகம் பௌதிக ஆய்வுத் துறைக்கு ஏற்பட்ட நல்லதிர்ஷ்டமாக அமைந்தது.

உலகம் போற்றும் பௌதிக பேரறிஞராகத் திகழ்ந்து அவர் அரிய பல சாதனைகளையாற்றி மனித குலத்துக்குப் பெருந்தொண்டாற்றினார்.

அவர்தான் பாரதத்தின் புகழை உலகமெங்கும் பரப்பிய பௌதிக இயல் அறிஞரான சர்.சி.வி. இராமன் ஆவார்.






## ஞாயிறு களம்

ஆசிரியர்: பாதாசன்,

வெளியிட்டோர்:
பூவழகி பதிப்பகம்,
**292, சீனிவாசப் பெருமாள் சன்னதி தெரு, சென்னை600014.**

பக்கம்: 183 விலை: ரூ.30

**'வெ**ண்ணெய் திரள்கிறது' என்பது முதல், 'நினைக்கவுமா கூடாது?' என்பது வரையான 41 கட்டுரைகளின் தொகுப்புநூல் இது.

நூலாசிரியர் மலேசியாவாசி; எனினும் இனிய தமிழில், பல பெரிய செய்திகளையெல்லாம் கூட எளிய நடையில் தெரிவித் திருக்கிறார். அத்தனைக் கட்டுரை களும் அங்கே வெளிவரும் ஞாயிறு களம் 'தமிழோசை' ஏடு களில் அவ்வப்போது வெளி யானவை.

அங்குள்ள தமிழர்க்கு மட்டு மன்றி, நம் போன்றார்க்கும் ஏற்ற படி இந்நூலில் பல கட்டுரைகள் உள்ளன.

## குறிஞ்சிப் பூக்கள்

ஆசிரியர்:
திருமதி ப. பத்மாதேவி.

இந்நூலும் மேற்கண்ட பதிப்பகத்தின் வெளியீடு.

பக்கம்: 160 விலை: ரூ.25

**நூ**லாசிரியை, மலேசிய நாட்டின் பண்பட்ட எழுத்தாளர் களில் ஒருவர். முப்பதாண்டுக் காலமாகப் பல ஏடுகளிலும் கதை, கட்டுரை, நாடகம் என்று எழுதி வருபவர்.

அப்படி, அவ்வப்போது எழுதப் பட்ட 21 சிறு கதைகளின் தொகுப்பே இந்த நூல் ஆகும். சமுதாயத்தின் எல்லா மட்டத்தில் உள்ளவர்களும் கதைகளின் கதா பாத்திரங்களாக்கப் பட்டுள்ளனர். சில கதைகள் சிறுகதைக்கான வரம்பை மீறியிருந்த போதிலும் படிக்கச் சுவை குன்றாதவை களாக இருக்கின்றன.

## நீங்களும் நூறாண்டு வாழலாம்

ஆசிரியர்: நலன்கிள்ளி

வெளியிட்டோர்:
கதிர் வெளியீடு,
7, பொன்னம்பலம் தெரு,
சோழபுரம், அம்பத்தூர்,
சென்னை-600053.

பக்கம்:144 விலை: ரூ.23

**த**லைப்பே பலருக்குப் பிர மிப்பை ஏற்படுத்தக்கூடும்.

ஒரு மனிதன் எவ்வாறான ப்ழக்கவழக்கங்கள் அமையப் பெற்றிருந்தால் எப்படிப்பட்ட உணவு, உடற்பயற்சி மேற் கொள்ளுபவனாக இருந்தால் நீண்டகாலம் வாழமுடியும் என் பதை விளக்குகிறார், நூலாசிரியர்.

குடிக்கும் நீர் எப்படியிருக்க வேண்டும் என்பதுமட்டுமல்ல; குளிப்பது எப்படி? புலனடக்கம் எந்த அளவுக்குத் தேவை?- என்பதெல்லாம் கூட 11 பயன்மிகு கட்டுரைகளின் மூலம் இந்தப் புத்தகத்தில் விளக்கிச் சொல்லப் பட்டிருக்கிறது.

## ஆற்றங்கரை அரசமரம்

ஆசிரியர்:
கவிஞர் வே.பிரபாகரன்,

வெளியிட்டோர்:
அழகம்மை பதிப்பகம்,
ஆர்.5611, கோட்டூர்புரம்,
சென்னை-600085.

பக்கம்:124 விலை: ரூ.24

**மா**ணவச் செல்வங்கள் படித்து இன்புறத்தக்க, சிறுவர்க் கேற்ற சிந்தனைக் கதைகள் 21 இந்தப் புத்தகத்தில் அடங்கியிருக் கின்றன.

அரசமரத்தின் காற்று, மலட்டுத் தன்மையைப் போக்கும் என்பது யாருக்காவது தெரியுமோ? இப்படிப்பட்ட அரிய செய்திகளை யும் தெரிவிக்கும் நூலாசிரியர்-சிறுவர், சிறுமியர் சிந்தனையைத் தூண்டும் வகையிலேயே ஒவ் வொரு கதையையும் எளிய பாடம் போலப் படிக்கப் படைத்திருக் கிறார்.

## தேன்

ஆசிரியர்: க. சுப்பிரமணியம்.

வெளியீடு:
காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை - 625 020.

பக்கம்: 28 விலை: ரூ.6

**த**மிழ்நாடு இயற்கை மருத் துவச் சங்கம் தயாரித்துள்ள இந்நூல், தேனின் • மருத்துவக் குணங்களைத் தெரிவிக்கிறது.

அறிவியலால் தேனை ஆராய்ந்து, அதனால் நாம் நலம் பெறுவது எப்படி? அதிலுள்ள சர்க்கரை யால் ஏதேனும் பாதிப்பு உண்டா? என்றெல்லாம் எளிய முறையில் அறிவித்திருக்கிறார்கள்.

-'இந்திரன்'

# எங்கள் ஊர் பிரச்சினை

**பிரச்சினை:**

**எங்கள் கிராமத்தில் பயணிகள் பஸ் ஏறுமிடத்தில் நிழற்குடை கட்ட வேண்டிப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். இக் கிராமத்தின் பஸ் நிலையத்தில் மூன்று கிராமங்களைச் சேர்ந்த மக்கள், பஸ் ஏறுகின்றனர். வெயில் கொடுமையிலும், மழைக் காலங்களிலும், குழந்தைகளும், பெரியவர்களும் துன்பப்படுகிறார்கள். ஆகவே, பயணிகள் நிழற்குடை கட்டித்தர வேண்டுமாய்ப் பணிவுடன் கேட்டுக்கொள் கிறோம்.**

**அடுத்தபடியாக, எங்கள் கிராமத்தில் சுமார் 2000 கிராம மக்கள் வசிக்கின்றோம். குடிநீர் இல்லாமல், கிணற்றில் இறைத்துக் குடித்துவருகின்றோம். இதனால், தொத்து வியாதிகள் வருகின்றன. ஆகவே பாதுகாக்கப் பட்ட குடிநீர் மேல்நிலைத் தொட்டி கட்ட உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.**

**-கிராம மக்கள், இறைஞ்சி**
**கள்ளக்குறிச்சி வட்டம், விழுப்புரம்.**

**தீர்வு:**

தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம் இறைஞ்சி கிராமத்தில் நிழற்குடை கட்டும் பணி, தற்போது போதிய நிதி வசதி இல்லாத காரணத்தினால் வருகின்ற 1996-97-ஆம் ஆண்டு ஜே.வி.வி.டி. 80 சதவிகிதத் திட்டத்தில் நிதி வசதி கிடைக்கப் பெற்றதும் எடுத்துச் செய்யப்படும்.

மேலும் இறைஞ்சி கிராமத்தில் 1991-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி, 1095 நபர்கள் வசித்து வருகின்றனர். கிராமம் மற்றும் காலணியில் 8 குடிநீர் கைப் பம்புகள் (கையிறைப்பான்கள்) நல்ல முறை யில் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டி முடித்துச் செயல்படுத்தப்பட்டு வந்தது. அதற்குரிய நீர் ஆதாரம் பொய்த்து விட்டமையால், தற்போது விசைப் பம்புத் திட்டம் செயல்படவில்லை. புதிய நீர் ஆதாரம் ஏற்படுத்தும் வகையில் நடப்பு நிதியாண்டில் புத்துயிர் ஊட்டி, குடிநீர் வழங்கும் திட்டத் தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தின் மூலம் திட்டம் செயல்படுத்தப்பட வுள்ளது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**-ஆர். நடராஜன், பி.ஏ.,**
**ஆணையாளர்**
**ஊராட்சி ஒன்றியம், தியாகதுருகம்.**

**பிரச்சினை:**

**எங்கள் ஊரில் குழாய் இல்லாமல் குளத்தில் தண்ணீர் எடுக்கிறோம். அதனால், குழந்தைகள் பேதி, மஞ்சள்காமாலை, மலேரியா, போன்ற நோய்களால் பாதிக்கப் படுகிறார்கள். இதனால் குழந்தைகள் இறந்துவிடுகின்றன. கிணற்றில், குளத்தில் தண்ணீர் எடுப்பதால், பெரியவர்களுக்கும் நோய்கள் வருகின்றன. குளம் 5 கி.மீ. உள்ளது. இதனால் வேலைக்குப் போகும் நேரம் தாமதமாகிறது. தயவுசெய்து எங்கள் ஊருக்குக் குடிநீர்க் குழாய் அமைத்துத் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.**

**-எம். சசிகலா,**
**பொதுமக்கள், மலையாங்குளம் அஞ்சல்**
**மாகரல் (வழி) உத்திரமேரூர் வட்டம்.**

**தீர்வு:**

உத்திரமேரூர், ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மலையாங்குளம் கிராமத்திற்குக் குடிநீர் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்க குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

**-க. புருஷோத்தமன்**
**ஆணையர், ஊராட்சி ஒன்றியம்**
**உத்திரமேரூர்.**

## பிரச்சினை:

கோவை மாவட்டம், பொள்ளாச்சி வடக்கு நல்லாத்துக்குளி கிராமத்தில் உள்ள பொதுமக்கள் மயானக்காடு இல்லாமல் ஊரில் இருந்து சுமார் 3 கி.மீ. தூரம் சென்று ஒரு ஆற்றங்கரையின் ஓரத்தில் இறந்த உடலைப் புதைத்து வருகிறார்கள். அந்த இடத்தில் இப்போது வயல் நடவு செய்து, நெற்பயிர் செய்கிறார்கள். இப் போதைக்கு எங்கள் ஊர் மக்கள் இறந்து போனோர் உடலைப் புதைக்க இடமில் லாமல் மிகவும் துன்பத்துக்குள்ளா கிறார்கள். இந்தக் கோரிக்கையைப் பல ஆண்டுகளாகப் பல அதிகாரிகளுக்கும், சட்டமன்ற உறுப்பினருக்கும், கொடுத்தும் எந்தப் பலனும் இதுவரை இல்லை. தாங்கள் நல்லாத்துக்குளி மக்களின் இந்த நீண்டநாள் பிரச்சினையைத் தீர்த்து வைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

-எஸ். சிவதாஸ்
நல்லாத்துக்குளி, பொள்ளாச்சி வட்டம்
கோவை மாவட்டம்.

## தீர்வு:

மனுதாரரால் புகார் செய்யப்பட்டுள்ள, பொதுமக்களால் சுடுகாடாகப் பயன்படுத்தி வரப்படும் ஆற்றுப் புறம்போக்கின் தென் புறம், திருமதி அன்னம்மாள் என்பவரால் 6 சென்ட் பரப்புக்கு நெல் நடப்பட்டிருந்தது. தற்போது அகற்றப்பட்டுவிட்டது எனவும், மேற்படியாரையும் இனிமேல் ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது என்று அறிவுறுத்தப் பட்டுள்ளது. எனவே நல்லாத்துக் குளி கிராமப் பொதுமக்கள் எப்போதும் போல் மேற்படி ஆற்றுப் புறம்போக்கைச் சுடுகாடாகப் பயன்படுத்தலாம் எனவும், பொள்ளாச்சி வட்டாட்சியர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

-அதுல் ஆனந்த், இ.ஆ.ப.,
உதவி ஆட்சியர், பொள்ளாச்சி

## பிரச்சினை:

நாங்கள் பெரியார் மாவட்டம், கோபி தாலுக்கா கிராமம் பாரியூர் நஞ்ச கவுண்டம்பாளையத்தில் வசிக்கின்றோம். இந்திரா காலனி அருந்ததியர்கள். எங்களுக்கு ஆற்றுத் தண்ணீர் ஒழுங்காக வருவதில்லை. வாரம் ஒரு முறை வருவதே கடினம். நாங்கள் கோபி டவுனுக்குப் போய்தான் தண்ணீர் எடுத்து வரவேண்டும். கால்நடையாக இங்கிருந்து போய்விட்டு வந்தால் நேரமாகி விடுகிறது. அதனால் கூலி வேலைக்கு நாங்கள் போகமுடிவதில்லை. எங்கள் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்துவைக்குப்படி கேட்டுக்கொள்கிறோம்.

-இந்திரா காலனி அருந்ததியர்கள்,
பாரியூர், நஞ்ச கவுண்டம்பாளையம்.

## தீர்வு:

பாரியூர் ஊராட்சி, நஞ்ச கவுண்டம் பாளையம் இந்திரா காலனி அருந்ததியர் காலனியின் மக்கட்தொகை 600 ஆகும். ஊராட்சிகளின் மூலம் அப்பகுதி மக்களுக் கென்றே தரைமட்டத் தொட்டிகள் கட்டப் பட்டு பைப் லைன் போடப்பட்டு குடிநீர் விநியோகம் சீராகச் செய்யப்பட்டு வருகிறது. மேலும், அக் காலனியில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு (கைப்பம்பு) ஒன்றும் உள்ளது. அக் குழாய்க் கிணறு நல்லமுறையில் இயங்கி வருகிறது. குடிநீர் செல்லும் 'பைப் லைன்' ஐந்து இடங்களில் உடைந்து இருந்ததால், அந்தந்தப் பகுதிகளுக்குக் குடிநீர் விநியோகம் தடைப்பட்டது. புகாரில் ஆற்றுநீர் வரவில்லை என்றுதான் குறிப்பிடப் பட்டுள்ளது.

இருப்பினும், தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குத் தகவல் தெரிவிக்கப் பட்டு, குடிநீர் பைப் லைன்கள் சரிசெய்யப் பட்டு, இப்போது குடிநீர் சீராக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்பதையும் அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

-ஆர்.எஸ். கண்ணன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்
ஈரோடு, பெரியார் மாவட்டம்.

# வணிக நிறுவனங்களின் பெயர்ப்பலகை

# தமிழுக்கு முதல் மரியாதை

(தமிழ் ஆட்சி மொழி - தமிழ்ப் பண்பாட்டுத் துறை சார்பில் தமிழ் வளர்ச்சித் துறை வெளியிட்டுள்ள நூலிலிருந்து)

| | | | |
|---|---|---|---|
| 1. | Accountant | .. | கணக்கர், கணக்காய்வாளர், கணக்காளர் |
| 2. | Acknowledgement | .. | பெறுகை ஒப்பம், ஒப்புரை |
| 3. | Acid | .. | அமிலம் |
| 4. | Acquisition | .. | கைப்படுத்துகை, கையகப்படுத்தல் |
| 5. | Additional | .. | கூடுதல் |
| 6. | Adhesives | .. | பசைமங்கள், ஒட்டிகள் |
| 7. | Adhesives stamp | .. | ஒட்டு வில்லை |
| 8. | Advertisers | .. | விளம்பர வினைஞர், விளம்பரதாரர் |
| 9. | Agarbathies | .. | அகில் மணக்குச்சிகள் |
| 10. | Agency | .. | முகவாண்மை, முகவர்கள், முகவாண்மையகம், முகவரமைப்பு |
| 11. | Agent | .. | முகவர் |
| 12. | Agro Centre | .. | வேளாண்மை நடுவம், வேளாண் மையம் |
| 13. | Agro Industries | .. | வேளாண் தொழிலகங்கள், வேளாண் தொழில்கள் |
| 14. | Agro Service | .. | உழவுப் பணி, வேளாண்மைப் பணி |
| 15. | Agro Service Centre | .. | வேளாண்மைப் பணி மையம் |
| 16. | Air-Conditioner | .. | காற்பதனி, குளிர்பதனி, சீர்வளி |
| 17. | Airport | .. | வான்திடல், வானூர்தி நிலையம் |
| 18. | Alarm Time Piece | .. | அலறி, மணி அலறி, அலறி மணிப்பொறி |
| 19. | Aluminium Vessel Store | .. | அளமியக்கலப் பண்டகம், அலுமினியப் பாத்திரக் கடை |
| 20. | Ambulance | .. | மருத்துவ ஊர்தி, உதவுகை ஊர்தி |
| 21. | And Sons | .. | மற்றும் மகார், மகாரும் மக்களும், மக்கள், மகன்கள் |
| 22. | Arcade | .. | வில் வளைவு |
| 23. | Artisan | .. | கைவினைஞர், கைத்திறத் தொழிலாளர் |
| 24. | Artist | .. | கலைஞர் |
| 25. | Art Prints | .. | கலை அச்சீடுகள், கலை அச்சுக்கள் |
| 26. | Arts | .. | கலையகம், கலை, கலைக்கூடம் |
| 27. | Art Service | .. | கலைப் பணி |
| 28. | Asbestos | .. | கல்நார் |
| 29. | Assistant | .. | உதவியாளர் |
| 30. | Associates | .. | கூட்டாளி, பங்காளி, துணைமையர், இணைவோர் |
| 31. | Audition | .. | கேட்டாய்தல் |
| 32. | Auditor | .. | தணிக்கையாளர் |
| 33. | Auditorium | .. | கலையரங்கம் |

34. Audio Cassette .. ஒலிப்பேழை, ஒலிநாடா

35. Audio Centre .. கேட்பொலியகம், கேட்பொலி நடுவம், ஒலியகம், ஒலிநாடா மையம்

36. Auto Lining .. தானி-வரிப்பீடு

37. Automatic Watch .. தன்னியக்க மணிப்பொறி

38. Automobiles .. தானியங்கிகள், தானியங்கிகள் வினையகம்

39. Autorickshaw .. தானியங்கிழுவை, தானி, தானியங்கி

40. Auto-Service .. தானிப் பணியகம்

41. Auto Spare Industries .. தானி, உதிரியுறுப்புகள் தொழிலகம், உதிரிப்பொருள்கள் தொழிலகம்

42. Auto-Spare Parts .. தானி-உதிரியுறுப்புகள், உதிரிப்பொருட்கள்

43. Auto-wings .. தானி-சிறகம்

44. Avenue .. நிழற்சாலை, கவின்பாதை, மரம் பயில் சாலை

45. Bakers & Confectioners .. அடுமனைஞர் மற்றும் தின் பண்டங்கள்

46. Bakery .. அடுமனை

47. Bamboo Mart .. மூங்கிலங்காடி, மூங்கில் கடை

48. Bankers .. வைப்பகர், வங்கி

49. Bar .. அருந்தகம், மதுக்கூடம், மது அருந்தகம்

50. Bar Soap .. பாரை வழலை, நீள் வழலை, சவர்க்காரம், சவர்க்காரக் கட்டி

51. Battery Service .. மின்கலப் பணியகம்

52. Bazaar .. அங்காடி, கடைத்தெரு, கடைவீதி

53. Beauty Parlour .. அழகு நிலையம், எழில் புனையகம்

54. Beavery .. விலங்குகள் வளர்ப்பிடம்

55. Bedding Mart .. படுக்கை அங்காடி

56. Beeda Stall .. வெற்றிலைச் சுருள் நிலையம், மடி வெற்றிலைக் கடை

57. Beef .. மாட்டிறைச்சி

58. Benefit Fund .. நலநிதி

59. Bhavan .. நிலையம்

60. Binder .. கட்டகர், நூற்கட்டுநர்

61. Binding Works .. கட்டகப் பணியகம், நூற் கட்டகம், நூற் கட்டுப் பணியகம்

62. Biscuits .. ஈரட்டிகள் (உரொட்டிகள்)

63. Block Makers .. அச்சுரு வினைஞரகம், படக்கட்டைத் தொழில், அச்சுருப் பணியகம்

64. Blue Metals .. கருங்கல் நீல மாழைகள், நீல மாழைக் கற்கள், நீலப் பொன்மங்கள், நீல மாழைக் கல்லகம்

65. Boarding & Lodging .. உண்டுறை விடுதி, உணவு உறையுள் விடுதி

66. Body-builders (vehicles) .. உடலங் கட்டுநர் (ஊர்திகள்) ஊர்திகட்டுநர், வண்டி மேற்கூடு கட்டுநர்

67. Boiler .. கொதிகலன்

68. Bore-well Services .. ஆழ்துளைக் கிணறு பணியகம்

69. Breweries .. வடிப்பகம், வடிசாலை

70. Brickfield .. செங்கற் சூளை, காளவாய், காளவாசல்

71. Brick Works .. செங்கல் தொழிற்சாலை-தொழிலகம்

72. Broiler Centre .. இறைச்சிக் கோழி நடுவம் (மையம்) (கடை)

73. Brothers .. உடன்பிறப்புகள்

74. Builders .. கட்டிட அமைப்பாளர், கட்டிடக் கலைஞர், கட்டுநர்

75. Building Society .. கட்டுமானச் சங்கம் - கழகம்

76. Buffet .. எடுத்தூண், மகிழ்ந்தூண், கூட்டுண்

77. Bulb .. குமிழி, குமிழ் விளக்கு

78. Bunk .. பேழங்கு, மூடிருக்கை, சிறுகடை

79. Bureau .. பிரிவு அறையகம், பேழை, நிலைப்பேழை

80. Business .. வாணிகம்

81. Butcher .. தசை வாணிகர், ஊன் விலங்கு வெட்டுநர், இறைச்சி வெட்டுநர்

82. Button Centre .. பொத்தான் நடுவம், பொத்தான் கடை

83. Cables .. கம்பிவடங்கள், வடக்கம்பி, வடம்

84. Cabs .. வாடகை வண்டி

85. Cafe .. அருந்தகம், உணவகம்

86. Cafteria .. சிற்றுண்டி நிலையம்

87. Calendar .. நாட்காட்டி

88. Camp .. முகாம்

89. Camphor Works .. எரியணைப் பணியகம்

90. Campus .. வளாகம்

91. Cane Works .. பிரம்புப் பணிகள், பிரம்பு விளையகம்

92. Canteen .. சிற்றுண்டிச்சாலை, சிற்றுண்டியகம்

93. Canvas .. கித்தான், திரைச்சீலை, திரட்டு சித்திரப்படம்

94. Carpentry Works .. தச்சுப் பணிகள்

95. Cash Counter .. பணம் வழங்குறை, பட்டுவாடா அறை, பணம் வழங்குமிடம்

96. Cassette .. பேழில், பேழை, நாடா

97. Ceiling Fan .. முகட்டு விசிறி

98. Cement .. பைஞ்சுதை, பசுஞ்சுதை, பசுங்காரை

99. Centre .. நடுவம், மையம்

100. Chalan .. அக இதழ், செலுத்துச் சீட்டு

101. Chalk Industries .. சுண்ணக்கட்டித் தொழிலகம்

102. Chemicals .. வேதுப் பொருள்கள், வேதியப் பொருள்கள்

103. Chicken Centre .. கோழியிறைச்சி நடுவம், கோழியிறைச்சிக் கடை

104. Chit Fund .. சீட்டு நிதி

105. Club .. மன்றகம், சங்கம், விடுதி, உணவகம்

106. Clinic .. மருத்துவகம், மருத்துவ அகம்

107. Coffee Filter .. குளம்பி வடிகட்டி / காப்பி வடிகட்டி

108. Coffee House .. குளம்பியகம் / காப்பி நிலையம்

109. Coffee Mart .. குளம்பித்தூள் அங்காடி, காப்பித்தூள் கடை

110. Coil Industries .. சுருளைத் தொழிலகம், சுருள் தொழிலகம், மின்கம்பிச் சுருளகம்

111. Coir Industries .. கயிற்றுத் தொழிலகம்

112. Collections .. திரட்டுகள்

113. Colour Lab .. வண்ணக்கூடம், வண்ண ஆய்வகம், வண்ணப்பட ஆக்ககம்

114. Colours .. வண்ணங்கள், நிறங்கள்

115. Company .. குழுமம், வணிக நிறுவனம்

116. Complex .. வளாகம்

117. Compound .. அரணகம், சுற்றடைப்பு, சுற்றுச்சுவர்

118. Computer Centre .. கணிப்பொறி நடுவம், கணிணி நடுவம் கணிப்பொறி மையம்

119. Concrete Works .. திண்காரைப் பணியகம்

120. Condensed Disc .. செறி தட்டு, செறி தகடு

121. Cone Ice Cream .. கூம்புப் பனிகம்

122. Confectioners .. திண்பண்ட விற்பகம்

123. Constructions .. கட்டுமானங்கள்

124. Consultant .. கலந்துரைஞர், தகவுரைஞர் உசாக்கையர்

125. Containers .. கொள் கலம்

126. Contractor .. ஒப்பந்தகர், ஒப்பந்தக்காரர்

127. Constructor .. கட்டடம் கட்டுநர்

128. Cooker .. பொறியடுப்பு, சூட்டடுப்பு, சமைகலம்

129. Cool Drinks .. குளிர்பானங்கள், தண்ணருந்தகம்

130. Corporation .. கூட்டிணையம், நிறுவகம், நிறுவனம், கூட்டகம், கூட்டு நிறுவனம்

வாடிக்கையாளர்களுக்கு

எமது

விழாக்கால

மற்றும்

புத்தாண்டு வாழ்த்துக்கள்!

# ஆவின்

# பால் அருந்தி

# ஆரோக்கியம் பெறுவீர்!

நாவின் சுவைக்கு

ஆவின் வெண்ணெய், நெய், பால்பேடா

ஆகியவை அனைத்து பாலகங்களிலும் கிடைக்கின்றது.

ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள்

வாங்கி வளம்பெற வாழ்த்துகின்றோம்.

*ஜே.அருமைராஜ், பி.எஸ்சி.,*
*பொது மேலாளர்*

*காசி விஸ்வநாதன், இ.ஆ.ப.,*
*மாவட்ட ஆட்சியர்/தலைவர்*

***மதுரை மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்***
***மதுரை 625 020***

தொலைபேசி 650561 - 4

தொலையச்சு 0445 - 210

# மறக்க முடியாத மழைக் கோலம்!

‘மாமழை போற்றுதும்
மாமழை போற்றுதும்’... என்று
பாடிப் பரவசப்பட்டார்
பேராசிரியர் சுந்தரம் பிள்ளை!

‘வானின் றமிழ்வதால் மழையே
அமிழ்தம்’... என்று தம்
எழுத்தோவிய நேர்த்தி
காட்டினார் புரட்சிக் கவிஞர்
பாரதிதாசனார்.

எல்லாம் சரிதான்; ஆனால்
எதுவுமே எல்லை
கடந்துவிடுகிறபோது...?

சரியான காலத்தில்
தொடங்கியிருந்த போதிலும்
ஏழை எளியவர் வாழும்
குடிசைகளைக் காகிதக்
கப்பல்களாக்கிவிடும்அளவிற்கு...

அடுக்கு மாடிகளையும்
அப்பளம் போல் நொறுக்கும்
அளவிற்கு...

அணைக்கட்டைக்கூட
அத்துமீறுகின்ற அளவிற்கு...

தார்ச் சாலைகளையும்,
இரும்புத்
தண்டவாளங்களையும்
மண்புழுக்களாக நெளியச்
செய்கின்ற அளவிற்கு...

ஏரி, குளங்களையெல்லாம்
எல்லை காணமுடியாத
கடல்போல் விரிவாக்குகின்ற
அளவிற்கு...

ஒண்ட ஒதுங்கக்கூட
இடமில்லாத
வறியவர்களுக்கெல்லாம்
உழைக்கவியலா நிலையை
உண்டாக்கியதோடு,
அவர்களில் பலரின்
உயிரையும் குடிக்கின்ற
அளவிற்கு...

விவசாயப்
பெருமக்களையெல்லாம்
வேதனைப்படச் செய்கிற
அளவிற்குத் தமிழ்
நாடெங்கும்... தலைநகரம்



சென்னை மாநகரிலும் சில நாட்களாகப் பெய்த-அல்ல, அல்ல, கொட்டோ கொட்டென்று கடும் காற்றையும் துணைக்கு அழைத்துக்கொண்டு கொட்டித் தீர்த்த மழையால் நாம் அடைந்த, இந்த நாடே அடைந்த அல்லல்கள் ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல?

தொடர்ந்து பெய்திட்ட பலத்த மழை-போதுமடா சாமி இந்தப் பூமி தாங்காது... அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சு... விட்டால் போதுமென்று வேதனைக் குரல் எழுப்பிடலாயினர்.

ஒருவார காலத்திற்கு முன்னால் ஒருகை பார்த்துவிட்டுத்தான் மறுவேலை என்பது போல் பெய்த பெருமழை காரணமாக இலட்சோப லட்சம் பேர் குந்தக் குடிசையின்றித் தவித்தார்கள். அவர்கள் அனைவரையும் பாதுகாப்பான இடங்களிலே தங்கவைக்கும் பணி பெரும்பாலும் அரசினுடையதாயிற்று!

கிராம மக்களுக்கெல்லாம் உதவிக்கரம் நீட்டி 'யாமிருக்க பயமேன்' என்று பாதுகாக்கின்ற பெரியதோர் சக்தி, அரசுக்குத் தேவைப்படுவதாயிற்று!

அறுவடையை எதிர்நோக்கிக் காத்திருந்த 5 இலட்சம் எக்டேருக்குமேல் நெற்பயிர் நாசம்- பயிர்களை அடைமழையில் மூழ்கவிட்டு அரற்றிக் கொண்டிருந்த விவசாயிகளைத் தேற்றித்




என்பது போன்ற பழமொழிகளையெல்லாம் சொல்லியல்லவா நம்மையெலலாம் புலம்பவைத்துவிட்டது!

குறிப்பாக அண்ணா, விழுப்புரம் இராமசாமி படையாட்சியார், தென்னார்க்காடு வள்ளலார், நாகை காயிதேமில்லத், தஞ்சாவூர், ஏ.டி. பன்னீர்செல்வம், இராமநாதபுரம் மாவட்ட வாழ் மக்களெல்லாம் மழைக்காகத் தவம் கிடந்தது போக, உண்ண உணவின்றி எண்ணற்றோர் உயிர்வதைப்பட்டார்கள்; அவர்களுக்கெல்லாம் நீந்திச் சென்றும், படகில் போயும், ஹெலிகாப்டரில் பறந்தும் உணவு படைக்கவேண்டிய முக்கியக் கடமை அரசுக்கு ஏற்பட்டது.

போக்குவரத்துத் துண்டிக்கப்பட்ட கிராம மக்களுக்கு காற்றும், இடியும், மின்னலும், மழையும் கைகோத்துக் கொண்டதால் கலங்கிப்போன கடலோரக் தெம்புண்டாக்கும் பெரும் பொறுப்பு தமிழ்நாடு அரசினுடையதாயிற்று!

என்ன நேர்ந்தாலும் சரி, பாசத்தோடு வாக்களித்த மக்களின் நம்பிக்கை வீணாகாதபடி நேசக்கரம் நீட்டுவது நம் கடமை என்றுணர்ந்து அங்கிங்கெனாதபடி எங்கும் பரவலாய் தம் கடமை உணர்ந்து, கண்ணியம் கெடாதபடி தமிழ்நாடு அரசின் காக்கும் கரங்கள் நீண்டன. தி.மு.கழகத்தை

உருவாக்கியபோது 'ஆபத்துக் காலத்தில் எங்கள் கழகம் கட்சி பேதம் பாராது தீயணைப்புப் படைவீரன் போல் செயல்படும்!' என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னாரே? அவர் வழி நடக்கும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும் அதன்படி செயல்படலானார்.

தமிழகத்தில் பெய்த மழையினால் ஏற்பட்ட சேதங்களுக்கும், உயிர் உடைமை இழப்புகளுக்கும் துயர்துடைப்பு நிதியாக, முதல் கட்டமாக இருபதுகோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டார்.

தமிழகத்தில் ஏற்பட்ட வெள்ளச் சேதப் பகுதிகளின் துயர்துடைப்புப் பணிக்குப் பெரும் நிதி வழங்குமாறு மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. தேவகௌடா அவர்களுக்கு ஒரு கண்ணீர்க் கடிதம் எழுதினார்.

அன்புள்ள பிரதமர் அவர்களுக்கு,

தமிழ்நாட்டில் கடந்த ஒரு மாதமாக தொடர்ந்து மழை- சுமார் எட்டு மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான குடிசைகள் சேதமுற்றுள்ளன. பயிர்களும் சேதமுற்றுள்ளன. நாற்பதுக்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். சென்னையிலும், மற்ற மாவட்டங்களிலும் எல்லா சாலைகளும் பெருமளவுக்குப் பழுதாகிவிட்டிருக்கின்றன.

ஏரிகள் நிரம்பியது மட்டுமல்லாமல் உடைப்பெடுத்து ஊருக்குள் புகுந்து கிராமங்கள் துண்டிக்கப்பட்டு, ஹெலிகாப்டர் மூலம் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்படுகின்றன. சென்னை குடிசைப் பகுதி மக்கள் ஒண்டுவதற்கு இடமின்றி மாநகராட்சிப் பள்ளிகளிலும், திருமண மண்டபங்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இன்னமும் மழை விட்டபாடில்லை. வெள்ளம் நின்றபாடில்லை.

துயர் துடைப்புப் பணிகளுக்கு உடனடியாக உதவித்தொகையாக மத்திய அரசு பெரும் நிதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாநில அரசின் சார்பாக முதற்கட்டமாக இருபது கோடி ரூபாய் நிவாரண நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

-இவ்வாறு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மாண்புமிகு பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

வெள்ள நிவாரண நிதிக்காக மத்தியமாநில அமைச்சர் பெருமக்கள், சட்டப்பேரவை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய ஒரு மாதகால ஊதியத்தையே வழங்கிடுமாறு உரிமையோடு கேட்டுக்கொண்டார்.

கொடிய மழை காரணமாக இனிய உயிரைப் பறிகொடுத்தோர் இல்லத்தார்க்குப் பதினைந்தாயிரம் ரூபாய் அளிக்க அரசு சார்பில் ஆணையிட்டார். இது தவிரப் பிரதமர் நிதியிலிருந்து இதற்குப் பெரு நிதி கிடைக்குமென நம்பிக்கை தெரிவித்தார்.

மாநிலம் முழுதுமுள்ள மாவட்டங்கள் தோறுமிருந்தும் மழை காரணமாக துயரச் செய்திகள் வந்த வண்ணமிருந்தன. ஆகவே, அமைச்சர் பெருமக்களை யெல்லாம் அவ்வப் பகுதிகளுக்குச் சென்று ஆறுதல் கூறிடுமாறு நேரிலேயே அனுப்பிவைத்தார். நடந்தும், பேருந்துகளிலும், லாரிகளிலும் போய் அமைச்சர்களே மக்கள்பட்ட அல்லல்களில் தாமும் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்!.

வெள்ள நிவாரணப் பணிகளுக்காக மேலும் 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்தார்.

பழுதடைந்த சாலைகளைச் சரிப்படுத்த மட்டுமே 50 கோடி ரூபாய் தேவைப்படும் நிலை இருப்பதும் இங்கே நினைவுகூரத்தக்கது.

பெருமழை காரணமாக 75க்கும் மேலான பாலங்கள் உடைந்து போக்குவரத்தே இல்லாத நிலை உண்டாகி, சுமார் 100க்கும் மேலானோர் உயிரிழந்தனர்.
சுவர் இடிந்து வீழ்ந்தும் மின் கசிவு, காரணமாகவும் இன்னுயிர் நீத்திருக்கிறார்கள். எண்ணற்ற கால்நடைகள் மாண்டு மடிந்திருக்கின்றன. நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலைக ளெல்லாம், அழிந்த 'சாக்பீஸ்' கோடுகளாகியுள்ளன



எண்ணற்ற புத்தகங்களைப் படித்த ஒருவர், பல பெரிய மனிதர்களின் வாழ்க்கையைவிட மேலாக வாழ்ந்து விட்டவராவார்.

-பாவ்லென்கோவ்

வேதாரண்யம் போன்ற பல பகுதிகள், வெள்ளம் சூழ்ந்ததால் தீவுகளாகிவிட்டன. இலட்சக்கணக்கான குடிசைகள் நாசம். மூவாயிரம் குடிசைப் பகுதிகள் தேடிக் கண்டுபிடிக்குமளவிற்கு நீர் தேங்கிச் சிதைந்துள்ளன. சில கிராமங்களையே காணோம். மாநகராட்சிகள், நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள் தேர்தல் முடிந்து, போதுமான நிதி ஆதாரத்திற்கு என்ன வழி என்று எதிர்பார்த்திருந்த வேளையில் பெரும் பாதிப்புகளுக்கு ஆளாகியிருக்கின்றன. சற்றேரக்குறைய 800 ஏரி குளங்கள் கரை கடந்திருக்கின்றன. 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்கிற முதுமொழிக்கான முத்தாய்ப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் என்ற முறையிலே மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சென்னை மாநகரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கெல்லாம் உணவுப் பொட்டலங்கள் வழங்குவதற்காக, சென்னை மாவட்ட தி.மு.க. சார்பாக வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு மு.க. ஸ்டாலின் அவர்களிடம் 150 மூட்டை அரிசி வழங்கியிருக்கிறார்.

அதேபோலத் தமிழ் மாநிலக் கட்சித் தலைவர் திரு ஜி.கே. மூப்பனார் அவர்களும் 250 அரிசி மூட்டைகள் அளித்துத் தம் பெரிய மனதைக் காட்டிக்கொண்டிருக்கிறார்.

டிசம்பர் கடைசியில் பெய்த கனமழையாலும், புயலாலும் கடுமையான



## சைக்கிள் வீரர்

கரூர் தீரன் சின்னமலை மாவட்டம், பசுபதிபாளையம் காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராகப் பணிபுரியும் திரு.என். சிவாஜி (காவலர் எண்:877) 15.12.1996 அன்று காலை 6 மணிக்கு கரூரில் இருந்து சைக்கிளில் புறப்பட்டு சேலம், கிருஷ்ணகிரி, ஓசூர், பெங்களூர், சித்தூர் வழியாக 668 கிலோ மீட்டர் தூரத்தை விரைவாக 27 மணி நேரத்தில் கடந்து 16.12.96 அன்று காலை 9 மணிக்குச் சென்னை வந்தடைந்தார்.

திரு. என்.சிவாஜி அவர்கள் அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களைச் சந்தித்து, முதல்வர் அவர்களின் வாழ்த்துக்களைப் பெற்றார்.

கடந்த 20 ஆண்டுகளாக சைக்கிளை வேகமாக ஓட்டி அகில இந்திய அளவில் பல சாதனைகளை இவர் செய்திருக்கிறார். இரண்டு காதுகளும் கேளாத இவர், பிரான்சு நாட்டிற்குச் சென்று காது அறுவை சிகிச்சை செய்துகொண்டு, பிரான்சு நாட்டிலும் சைக்கிள் சாதனை நிகழ்ச்சியைச் செய்து காட்ட உள்ளார்.

சேதத்திற்குள்ளான விழுப்புரம் இராமசாமி படையாட்சியார், தென்னார்க்காடு வள்ளலார், நாகை காயிதேமில்லத் மாவட்டங்களில் நடைபெற்ற நிவாரணப் பணிகளை-

சேதமடைந்த சில பகுதிகளை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களே நேரில் சென்று பார்வையிட்டார். நிகரற்ற துன்பங்களுக்கு ஆளான மக்களுக்கு ஆறுதல் கூறினார். அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்களிடம் ஆற்ற வேண்டிய துயர்துடைப்புப் பணிகள் பற்றி அறிவுறுத்தினார்.

இதன் காரணமாகவே, முதல்வர் கலைஞர் அவர்களின் முக்கியமானதோர் டில்லிப் பயணம் ஜனவரிக்கு ஒத்திவைக்கப்பட்டது. இந்தியப் பிரதமரிடம் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக 625 கோடி ரூபாய் நிதி கோரப்பட்டுள்ளது. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு நாஞ்சில் கே. மனோகரன் அவர்கள் மூலம் தயாரித்தளிக்கப்பட்ட வெள்ளச் சேத முழு விவர அறிக்கை வெள்ளம் மிகக் கடுமையாகப் பாதித்த பகுதிகளின் புகைப்படங்கள், வீடியோப் படங்கள் ஆகியவை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மூலம் மத்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. 'மழைவிட்டும் தூவானம் விடவில்லை' என்ற கதையாக ஆங்காங்கே தேங்கிக் கிடக்கின்ற மழைநீர் காரணமாக பலவித நோய்கள் பரவிட வழியுண்டு. எனவே, குடிநீரைக் கொதிக்கவைத்து ஆறியபின் அருந்திடுமாறு மக்கள் நல்வாழ்வுத்துறை அறிக்கை விடுத்திருக்கிறது.

சென்னை மாநகரும், அதன் புறநகரும் மழையினாலே மோசமடைந்ததைப் போய்ப் பார்த்துப் போதுமான உதவிகளைச் செய்திடுமாறு மாநகராட்சி அதிகாரிகளை வணக்கத்திற்குரிய சென்னை மேயர் அவர்கள் முடுக்கிவிட்டு வருவது போலவே-

தமிழகத்தின் மற்ற மாநகராட்சி மேயர்களும், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்களும் பம்பரமாகச் சுழன்று பாடுபட்டு வருகிறார்கள்.

மழை வெள்ளச் சேதத்திற்குப் பேருதவிபுரிய வேண்டும் என்பதால், திரைப்படத் துறையினரின் வேண்டுகோளின் பேரில் ஒரு நாள் கேளிக்கை வரி மாநில அரசால் ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

இந்த மாபெரும் பணியில் பாதிக்கப்பட்டோர் வேதனை தீர, நிதிமிகுந்தவர் பொற்குவை தருவீர்...

நிதி குறைந்தவர் காசுகள் அருளுவீர்...

அதுவுமற்றவர் உழைப்பினை நல்குவீர்!

-பி.எல். ராஜேந்திரன்

---

வெள்ள நிவாரணப் பணிகள் குறித்து (15.12.96) தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்துறை அமைச்சர் திரு. என்.வீராசாமி, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. நாஞ்சில் கி. மனோகரன், மாநகராட்சி மேயர் திரு. மு.க. ஸ்டாலின், உயர் அலுவலர்கள், மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோருடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.









# அறிவியல் துளிகள்

## மண் அரிப்பு

காற்றினாலும், வெள்ளத்தாலும் பூமியின் மேல்பகுதி பாதிக்கப்பட்டு மண் அரிப்பு ஏற்படுகிறது. இந்த மண் அரிப்பால் பூமி ஆண்டுதோறும் ஒரு சதுர மைலுக்கு 350 டன் மண்ணை இழந்து வருகிறது. இப்படியே போனால் பூமியின் மேல்பகுதி ஒவ்வொரு 22 ஆயிரம் ஆண்டுக்கும் 40 அங்குலம் கீழே போய்க் கொண்டே இருக்கிறது. இன்னும் 2 கோடி ஆண்டுகளில் பூமி கரைந்து கடல்மட்டத்துக்குச் சமமாக வந்துவிடும்.

## கொசு

கொசுவுக்கு 47 பற்கள் இருக்கின்றனவாம். ஆனால் மனிதனுக்கு 32 தான். ஒரு கொசு தன் எடையைப் போல இரண்டு பங்கு இரத்தத்தை உறிஞ்சிக்கொண்டு அதனால் எளிதாகப் பறக்க முடியுமாம்.

## விஷம்

கடல் பாம்புகளில் ஐம்பது வகைகள் இருக்கின்றன. எல்லாமே நச்சுத்தன்மை கொண்டவை. நாகப்பாம்பைப் போலப் பத்து மடங்கு விஷம் உள்ளவை. இதனால் கடிபட்ட மனிதர்கள் 2 மணிநேரத்தில் உயிரிழந்து விடுவார்கள்.

## சிகரெட்

'ஃபில்டர் சிகரெட்டுகள் அதிகம் பாதிக்காது, நச்சுப் பொருளைத் தடுத்து விடுகிறது' என்று பெரும்பாலோர் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நம்பிக்கையில், பாக்கெட் பாக்கெட்டாகவும் ஊதித் தள்ளுகிறார்கள். ஆனால், சாதா சிகரெட் பிடிக்கிறவர்களைவிட, ஃபில்டர் சிகரெட் பிடிப்பவர்கள் 2 முதல் 4 ஆண்டுகளில் முன்னரே இறந்து விடுகிறார்கள் என்று பென்சில்வேனியாவில் நடத்தப்பட்ட ஓர் ஆராய்ச்சி தெரியப்படுத்தியுள்ளது.

புகை ஆக்ஸிஜனில் கரைவதை, பில்டர் தடை செய்துவிடுகிறது. இதனால், இரத்த ஓட்டத்தில் கார்போக்கி ஹேமகுளோபின் வடிவத்தில் கார்பன் மோனாக்ஸைடு அதிக அளவில் சேர்ந்து விடுகிறது. இதன் காரணமாக இதய இரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு, மாரடைப்பு ஏற்படுகிறது.

ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட புகை பிடிப்பவர்களில் 50 சதவீதம் பேர் மாரடைப்பாலும், 20 சதவீதம் பேர் புற்றுநோயாலும் பாதிக்கப்பட்டிருந்தனராம்.

## அதிக எண்ணிக்கை

உலகத்தில் விலங்குகளின் எண்ணிக்கையைவிட பூச்சிகளின் எண்ணிக்கை மிக அதிகம். உலகத்தில் உள்ள தாவர இனங்களில் 85 சதவீதம் கடலில் வாழ்கின்றன.

## கடலின் ஆழம்

கடல் மட்டத்திலிருந்து பார்க்கும்பொழுது கடலுக்கு மேலே உள்ள உயரமான பகுதியைவிட, கடலுக்குக் கீழே மிக ஆழமான பகுதியே அதிகம் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். உலகத்தின் மிக உயர்ந்த மலையாகக் கருதப்படும் எவரெஸ்ட்டின் உயரம் 29,028 அடி உயரம்தான். ஆனால் பசிபிக் கடலிலுள்ள மரியானா பள்ளத்தாக்கின் ஆழம் 36,198 அடி.

## தலைக்கு எவ்வளவு நீர் கிடைக்கும்

உலகத்திலுள்ள கடல்நீர் யாவற்றையும், உலகிலுள்ள ஆண், பெண், குழந்தை அனைவருக்கும் பங்கிட்டுத் தருவதென்றால், ஒரு தலைக்கு 11,000 கோடி காலன் தண்ணீர் கிடைக்கும். உலகில் உள்ள தண்ணீரில் 1.6 சதவீதம்தான் பருகுவதற்குரிய நல்ல தண்ணீர் ஆகும். இந்தக் குடிநீரை உலக மக்கள் அனைவருக்கும் சமமாகப் பிரித்துக் கொடுத்தால் அப்போது தலைக்கு 4 கோடி காலன் தண்ணீர் கிடைக்கும்.



# இசை கேட்டால் மனம் மகிழ்ந்தாடும்!

"கர்நாடக இசைக்கு நான் விரோதியுமல்ல; பகைவனும் அல்ல; கர்நாடக இசை என்பதே தென்புலத்தில் இருக்கின்ற தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய பகுதிகளிலே புழங்குகின்ற இசைதான் கர்நாடக இசை.

'கர்நாடக இசை என்றதும், அது ஏதோ பழைய காலத்து மைசூர் இசை என்று யாரும் கருதத் தேவையில்லை. அப்படிக் கருதினால், அந்த இசையைக்கூட இங்கே அவர்கள் தருவார்களோ மாட்டார்களோ என்ற அச்சமும் நமக்கு ஏற்படும்.

கர்நாடக இசை, தென்புலத்திலே உள்ளவர்கள் பயின்ற இசை; அவர்கள் இன்றைக்குப் புகழத்தக்க அளவிற்குப் பரப்பியுள்ள இசைதான் இந்த இசை. இன்றைக்கும் அந்த இசையைத் தமிழகத்திலே உள்ளவர்கள்_ தென்புலத்திலே உள்ளவர்கள் அதற்குரிய இலக்கண சுத்தமாக அட்சரம் பிசகாமல் தாளம் தவறாமல் ராகம் கெடாமல் பயன்படுத்துகின்ற அறிவொளிகளாகத் திகழ்கின்றார்கள்; இசைச் செல்வங்களாகத் திகழ்கின்றார்கள். சில இசைகளைக் கேட்கிறோம்; வெளிநாட்டிலிருந்தெல் லாம் வருகிறது. ஒரே காட்டுக்கத்தல்காக இருக்கிறது. அதற்கும் ஒரு கூட்டம்- விளம்பரம்! ஆனால் மாலியின் புல்லாங்குழல் ஆனாலும், ராஜரத்தினத்தின் நாதஸ்வரம் ஆனாலும்-இவை ஒலித்தால், அவையெல்லாம் இருக் குமிடம் தெரியாமல் போய்விடும்!"

— முதல்வர் கலைஞர் (15.12.96ல், இசைமன்றத்தின் 70வது ஆண்டு விழாவைத் தொடக்கிவைத்து ஆற்றிய உரையிலிருந்து)

---

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் (16.12.1996) திருமதி ஏ.வி.எம். ராஜேஸ்வரி அம்மையார் அவர்கள், ஏ.வி.எம். அறக்கட்டளையின் சார்பாக, வெள்ள நிவாரண நிதிக்காக ரூ.2 இலட்சத்திற்கான காசோலையை வழங்கினார்கள். திரு. ஏ.வி.எம். குமரன் உடன் உள்ளார்.



# கிராமத்துப் பழமொழிகள்

* நீ தாராளமாக இருந்தால் பணக்காரனாக முடியாது; பணக்காரனாக இருந்தால் தாராளமாய் இருக்க முடியாது!






* குழந்தை இல்லாதவன் செல்வன் இல்லை; பிள்ளைக்குட்டிக்காரன் ஏழை இல்லை!

* பணம் சேர்ப்பவன் ஒருபோதும் களைப்படையமாட்டான்; களைப்படைகிறவன் ஒருபோதும் பணம் சேர்க்க மாட்டான்!





* கறியின் ருசி
கரண்டிக்குத் தெரியுமோ?

* யானையை விழுங்கப்
பாம்பு ஆசைப்படலாமோ?





* நாணயம் ஒன்றே மதிப்புள்ள நாணயம்!

* நாலுபேர் வெட்டும் கேணி
நானூறுபேருக்குத் தண்ணீர் தரும்!





* வெற்றுக் கைப்பை நிமிர்ந்து நிற்காது!

* ஆயிரம் தடவை அளவு எடு;
ஒரு தடவை வெட்டு!





* பேசுகிறவன் எப்படியிருந்தாலும் சரி;
கேட்பவன் புத்திசாலியாக
இருக்க வேண்டும்!

* எறும்பு போல் இருந்தாலும் சரி;
உன் எதிரியை யானைபோல் நினை!





* பகைவனையும் நேசிக்கலாம்;
ஆனால் வேலியை எடுத்துவிடாதே!

* தெரியாத தேவதையைவிட,
தெரிந்த பிசாசே மேல்!

தொகுப்பு: பி.எல்.ஆர்.

# உங்களுக்குத் தெரியுமா?

## -மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை-

| திட்டத்தின் பெயர் மற்றும் வழங்கப்படும் சலுகைகள் | தகுதிகள் நிபந்தனைகள் | அணுக வேண்டிய முகவரி |
|---|---|---|
| **மாநில அரசு உதவித் தொகை** | | |
| **அ. பள்ளிப்படிப்பு உதவித்தொகை**<br>அனுமதிக்கப்பட்ட இலவசப் பாடப்புத்தகங்கள் தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மூலம் வழங்கப்படும். தனிக்கட்டணம், தேர்வுக்கட்டணம் வழங்கப்படும். இச்சலுகைகள் மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு இனத்தவர்களுக்கு 9 மற்றும் 10ம் வகுப்புகளுக்கு மட்டுமே வழங்கப்படும். சீர்மரபினர் இன மக்களுக்கு 6-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரை இச்சலுகைகள் வழங்கப்படும். சாதி வருமானச் சான்றிதழ்கள் மட்டுமே அளித்தல் போதுமானது. முறைப்படி உதவித்தொகை விண்ணப்ப மனுவில் விண்ணப்பிக்க வேண்டியதில்லை. | 1. தமிழ்நாட்டைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.<br>2. தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்டுள்ள மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு சாதிப்பட்டியலில் உள்ள சாதிகளில் ஏதாவது ஒன்றினை சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.<br>3. இந்து மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு, சீர்மரபினர் வகுப்பிலிருந்து கிறிஸ்துவ மதம் மாறியவர்களுக்கும் இக்கல்விச் சலுகை வழங்கப்படும்.<br>4. தமிழ்நாட்டில் உள்ள அரசு அல்லது அரசு அங்கீகாரம் பெற்ற கல்வி நிறுவனங்களில் பயில வேண்டும்.<br>5. பெற்றோர்/பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.25,000க்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>6. மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு மாணவர்கள்/மாணவியர்கள் சென்ற இறுதி தேர்வில் 40 விழுக்காடு மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். சீர்மரபினர் வெறும் தேர்ச்சி பெற்றிருந்தாலே போதுமானது. | சம்பந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர்/ஆசிரியைகள் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்/தனித் துணை ஆட்சியர் (க.சீ.) மதுரை |
| **ஆ. பள்ளி மேற்படிப்பு உதவித்தொகை:**<br>மாணவ, மாணவியர் களுக்கு படிப்புக் கட்டணம் சிறப்புக் கட்டணம், புத்தகக் கட்டணம், இத்துறையால் நிர்ணயிக்கப்பட்ட | மேலே குறிப்பிட்ட நிபந்தனைகள் அனைத்தும் இதற்கும் பொருந்தும். அச்சிடப்பட்ட விண்ணப்ப மனுக்களை கல்வி நிறுவனங்களிலிருந்து பெற்று பூர்த்தி செய்து தேவையான சான்றிதழ்களுடன் இணைத்து நிர்ணயிக்கப்பட்ட காலவரைக்குள் சமர்ப்பிக்கவேண்டும். தமிழ்நாட்டில் உள்ள மேல்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவக் கல்லூரியில் பயிலும் தமிழ்நாட்டை சேர்ந்த மிகப் பிற்படுத்தப்பட்டோர் | கல்வி நிறுவனத் தலைவர்கள் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள், |

| | | |
|---|---|---|
| விகிதத்திலும், தேர்வுக்கட்டணம், பல்கலைக்கழகம், தேர்வுத்துறை அலுவலர்களால் நிர்ணயிக்கப்பட்ட விகிதத்திலும் கல்லூரி விடுதிகளில் தங்கியுள்ள தொலைதூர மாணவ, மாணவியர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விகிதத்திலும் உண்டி உறையுள் கட்டணமும் பணமாக வழங்கப்படும். முறைப்படி உதவித்தொகை விண்ணப்பங்களில் கல்வி நிலையங்கள் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். | மற்றும் சீர்மரபினர் மாணவ மாணவியர்களுக்கு இவ்வுதவித் தொகைகள் வழங்கப்படும். | தனித்துணை ஆட்சியர் (கள்ளர் சீரமைப்பு) மதுரை |
| ஆங்கில மொழி வழியில் பள்ளிபடிப்பு பயிலும் மாணவர்களுக்குப் படிப்பு கட்டண விலக்கு சலுகை அளித்தல் (அரசால் நிர்ணயிக்கப்பட்ட படிப்புக் கட்டணம் மாணவ, மாணவியர்களுக்கு அளிக்கப்படும்). முறைப்படி விண்ணப்ப மனுவில் விண்ணப்பிக்க வேண்டியதில்லை. சாதி ஆதாரம் அளித்தால் போதுமானது. | அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் (இதர தனியார் பள்ளிகளுக்குப் பொருந்தாது) **6** முதல் **12**-ஆம் வகுப்பு வரை ஆங்கில மொழி வழியில் பயிலும் அனைத்து மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் இன மாணவ மாணவியருக்கு இச்சலுகைகள் பெற்றோர் வருமான வரம்பின்றி வழங்கப்படும். | பள்ளித் தலைமை ஆசிரியர்/ஆசிரியை மற்றும் மாவட்டம் பிற்படுத்தப்படோர் & சிறுபான்மையினர் நல அலுவலர் மற்றும் மதுரை கள்ளர் சீரமைப்பு தனித்துணை ஆட்சியர். |

**3. இலவசக்கல்வி (மூன்றாண்டு பட்டப்படிப்பு)**

| | | |
|---|---|---|
| பி.ஏ., பி.எஸ்.ஸி. மற்றும் பி.காம் போன்ற மூன்றாண்டு பட்டப்படிப்பு பயிலும் அனைத்து மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு மற்றும் சீர்மரபினர் இன மாணவ மாணவியருக்கும், பெற்றோர் | தமிழ்நாட்டில் உள்ள அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற அனைத்து கல்லூரிகளிலும் பயிலும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர்களும் (கிறிஸ்துவ மதத்திற்கு மதம் மாறியவர்கள் உட்பட) இச்சலுகைகளைப் பெறலாம்.<br><br>கல்லூரிகளில் பராமரிக்கப்பட்டு வரும் மாணவ/மாணவியரின் சேர்க்கை பதிவேட்டில் உள்ள சாதி விவரங்கள் அடிப்படையில் அவர்கள் பயிலும் கல்வி | கல்லூரி தலைவர்கள்/மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள், |

| | | |
|---|---|---|
| ஆண்டு வருமான வரம்பின்றி கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கப்படும்.<br><br>1. அரசால் நிர்ணயிக்கப்பட்ட படிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம் (ஆண்டு வருமானம் இல்லை)<br><br>2. புத்தகக் கட்டணம் இத்துறையால் நிர்ணயிக்கப்பட்ட அளவில் (ஆண்டு வருமானம் ரூ. 25,000)<br><br>3. கல்வி நிலைய விடுதிகளில் தங்கியுள்ள தொலைதூர மாணவ, மாணவியருக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவில் மாதாந்திர உண்டி உறையுள் கட்டணங்கள் (ஆண்டு வருமானம் ரூ.25,000) | நிறுவனத் தலைவர்கள் தயாரித்து அனுப்பும் ஒப்பளிப்புப் பட்டியல் அடிப்படையில் இச்சலுகைகள் வழங்கப்படும். தனியே விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டியதில்லை. ஆனால் புத்தகக் கட்டணங்களுக்கும் உண்டி உறையுள் கட்டணங்களுக்கும் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.25,000க்கு உட்பட்ட மாணவ, மாணவியர்கள் மட்டும் முறைப்படி விண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பிக்க வேண்டும். | தனித்துணை ஆட்சியர் (கள்ளர் சீரமைப்பு) மதுரை |

**4. இலவசக் கல்வி (தொழிற் பட்டப்படிப்புகள்)**

| | | |
|---|---|---|
| மருத்துவம் பொறியியல், சட்டம் கால்நடை மருத்துவம், விவசாயம் போன்ற தொழிற் பட்டப்படிப்பு பயிலும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் & சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துச் சலுகைகளும் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.25,000க்குட்பட்டு வழங்கப்படும். மேலும், குடும்பத்தில் இதற்கு முன்னர் பட்டதாரி எவரும் இருத்தல் கூடாது. | 1. பெற்றோர்/பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.25,000க்கு மிகைப்பட கூடாது.<br><br>2. மாணவரின் குடும்பத்தில் பட்டதாரிகள் யாரும் இருத்தல் கூடாது.<br><br>3. தம் குடும்பத்தில் மாணவர் தொழிற் பட்டப்படிப்பு பயிலும் முதல் மாணவராக இருத்தல் வேண்டும். | கல்லூரி தலைவர்கள்/மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள், தனித்துணை ஆட்சியர் (கள்ளர் சீரமைப்பு) மதுரை |

**5. இலவச கருவிகள் வழங்கல்**

| | | |
|---|---|---|
| சலவைத் தொழிலாளர்களுக்குப் பித்தளை இஸ்திரிப்பெட்டி, முடிதிருத்துவோருக்கு முடி திருத்தும் கருவிகள், போயர் மற்றும் ஒட்டர்களுக்கு கல்லுடைக்கும் கருவிகள் | வருமான வரம்பு ரூ.12,000க்குள் இருத்தல் | சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் |

**6. குறைந்த வட்டி வீதம் கடன் திட்டங்கள்**

| | | |
|---|---|---|
| 1. முடிதிருத்தகம் அமைத்தல்<br>2. சலவையகம் மற்றும் நடமாடும் சலவையகம் அமைத்தல் | வருமான வரம்பு ரூ.12,000க்குள் இருத்தல் | சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் |

**7. வீட்டுமனை வழங்கல் திட்டம்**

| | | |
|---|---|---|
| சொந்த வீட்டுமனை இல்லாத மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மக்களுக்கு வீடு கட்டிக்கொள்ள வீட்டுமனை இலவசமாக 0.03 சென்ட் அளவில் வழங்கப்படும். | மிகவும் பின்தங்கிய/சீர்மரபினராக இருத்தல் வேண்டும் | சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் |

**விடுதிகள்**

| | | |
|---|---|---|
| பள்ளி/கல்லூரி/தொழிற்பயிற்சிக் கல்வி நிலையங்களில் பயிலும் தொலைதூர மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ/மாணவியர்களுக்கு அரசு விடுதிகளில் விதிகளுக்குட்டட்டு தங்கும் இடவசதியும், உணவும் இலவசமாக வழங்கப்படும். பள்ளி விடுதிகளில் | பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.15,000க்குள் இருத்தல் வேண்டும்.<br>தொலைதூர மாணவ, மாணவியருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.<br>ரூ.15,000க்கும் மிகக் குறைந்த ஆண்டு வருமானம் உள்ள மாணவ, மாணவியருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், தனித்துணை ஆட்சியர் (கள்ளர் சீரமைப்பு) மதுரை |

| | | |
|---|---|---|
| தங்கியுள்ளவர்களுக்கு ஆண்டுக்கு இரண்டு செட் சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும். | | |
| **8. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள்**<br>மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் அமைந்துள்ள இத் துறையால் நடத்தப்படும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பிரமலைக் கள்ளர் இன மாணவ, மாணவியருக்கு இலவசக் கல்வி அளிக்கப்படும். ஏனைய இன மாணவ, மாணவியர்களும் இப்பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இவர்கள் அனைவருக்கும் பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், மதியஉணவு மற்றும் ஆண்டுக்கு இரண்டு செட் சீருடைகள் முதலியன இலவசமாக வழங்கப்படும். | பிரமலைக் கள்ளர் இன மாணவ, மாணவிகள் முன்னுரிமை அடிப்படையில் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். பெற்றோர் ஆண்டு வருமான வரம்பில்லை. | கள்ளர் பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் மதுரை (கள்ளர் சீரமைப்பு) தனித்துணை ஆட்சியர் |
| **9. சுருக்கெழுத்துத் தட்டச்சர் பயிற்சி**<br>(சுருக்கெழுத்து - 1 வருடம்)<br>(தட்டச்சு - 6 மாதம்) | கல்வி தகுதி ப்ளஸ் 2 பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.15,000 (தட்டச்சுப் பயிற்சி கீழ்நிலை/உயர்நிலைக்கு) சுருக்கெழுத்து பயிற்சிக்குத் தட்டச்சு தேறியிருத்தல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட பயிலகத்தில் பயில வேண்டும். | சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் |
| 10. கணிப்பொறி (கம்ப்யூட்டர்) பயிற்சி<br>(6 மாதங்கள்) | பட்டதாரியாக இருக்க வேண்டும். பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.12,000 | பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர், சென்னை-5 செய்திதாளில் ஆண்டு விளம்பரம் கண்ணுற்ற பிறகு |

| | | |
|---|---|---|
| | | விண்ணப்பிக்க வேண்டும். மாதிரி விண்ணப்ப படிவம் விளம்பரத்தில் உள்ளவாறு. |
| **11. கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி** (3 மாதங்கள்) | 10-ஆம் வகுப்பு தேர்ச்சி, எடை 50 கிலோ, உயரம் 160 செ.மீ. வயது 20லிருந்து 28க்குள் ஆண்டு வருமானம் ரூ.12,000 மிதரக வாகனம் உரிமம் பெற்று ஓராண்டு ஆகியிருக்க வேண்டும். கும்மிடிப்பூண்டி சாலை போக்குவரத்து நிறுவன பயிற்சி நிலையத்தில் பயிற்சி அளிக்கப்படும் | பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, இயக்குநர், சென்னை5 செய்தித்தாளில் ஆண்டு விளம்பரம் கண்ணுற்ற பிறகு விண்ணப்பிக்க வேண்டும். மாதிரி விண்ணப்ப படிவம் விளம்பரத்தில் உள்ளவாறு. |
| **12. சட்டப்பட்டதாரிக்கான பயிற்சி** (3 ஆண்டுகள்) | சட்டப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும். பெற்றோர்/பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.12,000க்கு மிகைப்படாமல் இருத்தல் வேண்டும். வயது வரம்பு 30. | பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, இயக்குநர், சென்னை-5 செய்தித்தாளில் ஆண்டு விளம்பரம் கண்ணுற்ற பிறகு விண்ணப்பிக்க வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவம் விளம்பரத்தில் உள்ளவாறு. |
| **13.** ஐ.ஏ.எஸ்/ஐ.பி.எஸ். தேர்வுகளுக்கான பயிற்சி | தகுதிகள்: பி.ஏ.,பி.எஸ்.ஸி மற்றும் பி.காம்., 80% மதிப்பெண்களுக்குக் குறையாமல் அல்லது எம்.ஏ., எம்.காம் 55% மதிப்பெண்களுக்குக் குறையாமல் அல்லது எம்.எஸ்.ஸி. 65% மதிப்பெண்களுக்குக் குறையாமல் அல்லது தொழிற் கல்வியில் எம்.பி.பி.எஸ்., பி.ஈ.,பி.எஸ்.ஸி. (அக்ரி) பி.வி.எஸ்.ஸி. மற்றும் பி.எல்.<br><br>சேர்க்கைக்கு ஆண்டு வருமான வரம்பு இல்லை எனினும் விடுதியில் தங்கிப்படிக்க பெற்றோர்/பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.24,000க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். | பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர், சென்னை-5 செய்தித்தாளில் ஆண்டு விளம்பரம் கண்ணுற்ற பிறகு விண்ணப்பிக்க வேண்டும். மாதிரி விண்ணப்ப படிவம் விளம்பரத்தில் உள்ளவாறு. |

| | | |
|---|---|---|
| **14.** தொழிற்பட்டப் படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வுக்கு முன்பயிற்சி (15 நாட்கள்) | தொழிற்பட்டப்படிப்பிற்கான நுழைவுத் தேர்விற்கு விண்ணப்பித்த அத்தாட்சி சமர்பிக்க வேண்டும். ஆண்டு வருமான வரம்பு இல்லை. | தலைமை ஆசிரியர்கள் அரசு/அரசு உதவி பெறும் உயர்/மேல்நிலைப் பள்ளிகள் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்/மாவட்ட ஆட்சித் தலைவரின் பத்திரிக்கைக் குறிப்பு. |
| **15.** உணவு மானியம் (தனியார் விடுதிகள்) | ஆண்டு வருமானம் ரூ.15,000 இத்துறையின் அங்கீகாரம் பெற்ற தனியார் விடுதியாக இருத்தல் வேண்டும். | அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள். |

**முதலாம் அட்டை:**

**செங்கை அண்ணா, விழுப்புரம் ராமசாமி படையாட்சி மாவட்டங்களில் வெள்ளச்சேதப் பகுதிகளைப் பார்வையிட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இலவச வேட்டி, சேலை, அரிசி வழங்கினார்.**

**இரண்டாம் அட்டை:**

தேசிய போலியோ சொட்டு மருந்து நாளையொட்டி எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் போலியோ சொட்டு மருந்து முகாமினைத் தொடங்கிவைத்து, குழந்தைகளுக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சொட்டு மருந்து வழங்கினார்.

**நான்காம் அட்டை:**

**மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சென்னையில் மழையினால் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று, பார்வையிட்டு அப்பகுதி மக்களின் குறைகளைக் கேட்டறிந்து, அவற்றைக் களைந்திட அலுவலர்களுக்கு ஆணையிட்டார்.**

*ஓசூரில் ரூ.630 கோடி மதிப்பீட்டில் அசோக்லேலண்ட் கட்டியுள்ள உவது ஆலைத் திறப்பு விழாவில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு தேவகௌடா, மாண்புமிகு தமிழக முதல்வர் மற்றும் அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் திரு ப.சிதம்பரம் ஆகியோர் கலந்துகொண்டனர். "தமிழக வெள்ள நிவாரணப் பணிக்கு முதல் கட்டமாக இருபத்தைந்து கோடி ரூபாய் அளிக்கப்படும்" என்று அவ்விழாவில் பிரதமர் குறிப்பிட்டார்.*

ஆசிரியரும் வெளியிடுபவரும்: ந.ச. பழனியப்பன். இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
துணை இயக்குநர்: டி.பி.எஸ்.சுந்தரநாதன், உதவி இயக்குநர்: எம்.அண்ணாமலை
ஆசிரியர் குழு: கே.டி. புகழேந்தி, ஜி. லோகநாதன், எம்.வி.எம். அசோகன், அமுதமாறன், பி.எல். ராஜேந்திரன், ஜி.பாஸ்கரன், எஸ். ஜெயலலிதா
ஓவியர்கள்: என். குமாரசாமி, சி. ஜெயச்சந்திரன், பி. குமார், தி. சம்பத், தி. மகேஸ்வரி
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை - 600 002. தொலைபேசி எண்: 568926, 568927

# ஆசிரியர் மடல்



இன்று புத்தாண்டு – ஆங்கிலப் புத்தாண்டு! 'நாம் நம்முடைய குழந்தையை அள்ளியெடுத்துக் கொஞ்சுவது, மற்றவர்களுடைய குழந்தைகளை உதாசீனப்படுத்துவது ஆகிவிடாது' என்று கூறினார், பேரறிஞர் அண்ணா அவர்கள்.

அந்த வகையில்– 'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்று கூறி நாம் பெருமிதம் கொள்ளுவதானது, மற்றெல்லா மொழிகளையும் துச்சம் எனக் கருதுவதுதாகிவிடாது.



வணிக நிறுவனங்களுக்கேற்ற தமிழ்ச் சொற்கள்பற்றி, தமிழ் வளர்ச்சித் துறையினர் நூல் ஒன்று வெளியிட்டுள்ளனர்; அதில் அணிந்துரை எழுதியுள்ள மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும் அந்தக் கருத்தைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்.

எனவே, அந்த அடிப்படையில்– 'தமிழரசு'– வாசகர்கள், முகவர்கள், விற்பனையாளர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் வாழ்த்தும் வணக்கமும் தெரிவித்து மகிழ்கிறது.

கடந்த ஆண்டில், 'தமிழரசு' இரண்டு கவிதைப் போட்டிகளை நடத்திப் பெருமை கொண்டது: அண்மையில் நாம் நடத்திய போட்டியில் பரிசு பெறும் இரண்டு கவிதைகள், இந்த இதழில் எழிலூட்டிக் கொண்டிருக்கின்றன. பாராட்டுக்குரிய மற்ற சில கவிதைகள், அடுத்த இதழினை அலங்கரிக்கவிருக்கின்றன.

விரைவில்– சிறுகதைப் போட்டி ஒன்று அறிவிக்கப்படவிருக்கிறது!

அன்பர்கள், தொடர்ந்து நல்லாதரவு நல்கி – நமது 'தமிழரசு' ஏட்டின் தூய தமிழ்ப் பணிக்கு இன்றுபோல் என்றும் இதயபூர்வமான நல்லாதரவு அளித்திட வேண்டுகிறோம்.

–ஆசிரியர்





**தூய**
பட்டு

**தூய**
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

**கோ-ஆப்டெக்ஸ்**
தமிழ் நாடு கைத்தறி

HTA.7556

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-







